அகமே புறம்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை

இரண்டாம் பதிப்பு

சென்னை

புரோகிரஸிவ் பிரஸ்.

Copy Right.

விலை அணா 8.

1916.

அறத்தைக் காணு அறிவே மரமாம் ;
அறத்தைப் பிழைத்த அறிவே மிருகம் ;
அறத்தைப் புரியும் அறிவே மனிதன் ;
அறத்தைக் காக்கும் அறிவே கடவுள்.

பொருட் குறிப்பு

பொருள்	பக்கம்
முதனூற் செய்யுள்.	4
முதனூற் பாயிரம்.	5
முதற்பதிப்பின் சிறப்புப்பாயிரம்.	6
முதற்பதிப்பின் பாயிரம்.	7
இரண்டாம்பதிப்பின் பாயிரம்.	8
ஜேம்ஸ் ஆலன் சரித்திரச் சுருக்கம்.	9
காப்பு முதலியன.	16
அகமும் புறமும்.	17
மனத்தின் தன்மையும் வன்மையும்.	21
பழக்கத்தை உண்டாக்கல்.	27
செய்தலும் அறிதலும்.	33
உயர்தர வாழ்வு.	40
,, முதற் பாடம்.	43
,, இரண்டாம் பாடம்.	47
,, மூன்றும் பாடம்.	58
மனோநிலைமைகளும் அவற்றின் காரியங்களும்.	66
வேண்டுகோள்.	73
மனம்போலவாழ்வு முதலிய நூல்களைப்பற்றிய சில மதிப்புரைகள்.	77

முதனூற் செய்யுள்

நின்னுடை யகத்தை நீதூய தாக்கின்,
நின்னுடை வாழ்வு நிதியழ கினிமை
மன்னியெஞ் ஞான்றும் வளர்ந்து நிற்கும் ;
நின்னுடை மனத்தை நீதினங் காப்பின்
நின்னுடை வாழ்வு நீடித்து நிற்கும்,
ஆண்மையும் வலிமையும் அழகும் எய்தும் ;
நின்னுடைபகையெலாம்நின்னுடையகத்துளும்
நின்னுடை மனத்துளும் நிற்ப; ஆகலின்
ஒன்றுநினை வெல்லா துறுநோய் செயாது ;
நின்னுயர் வீடும் நின்னுடை யகத்துளும்
நின்னுடை மனத்துளும் நிற்ப தறிகவே.

முதனூற் பாயிரம்.

சீனதேயத்துத் தத்துவ ஞானியாகிய கான்பூஸியஸ் என்பவர் "சகல அபிவிர்த்திகளுக்கும் சகல அறவளர்ச்சிகளுக்கும் ஒருவன் தன்னைச் சான்றோனாக்குதலே அடிப்படை" என்றனர். இம்முதுமொழி சுலபமானதாகவும், அநுபவத்திற் கொத்ததாகவும், தெளிவானதாகவும் இருப்பதோடு ஆழ்ந்ததாகவும், எல்லாப் பொருள்களும் அடங்கியதாகவும் இருக்கிறது, அறிவை அடைதற்கும் உலகத்திற்கு உதவி புரிதற்கும் இதனினும் நல்ல வழி யில்லையாகலான். தன்னைச் சான்றோ னாக்குதலினும் மேம்பட்ட வேலையாவது உயர்ந்த கருமமாவது இல்லை. எவன் குற்றமற்றவனாதற்குக் கற்கிறானோ, எவன் தூய அகத்தினனாதற்கு முயல்கிறானோ, எவன் சாந்தியும் ஞானமும் சான்றாக நோக்குந் தன்மையும் பொருந்திய ஒரு மனத்தை அடைவதை இலக்ஷியமாகக் கொண்டிருக்கிறானோ, அவன் மனிதர் செய்யக்கூடிய செயல்கள் எல்லாவற்றினும் மேலான செயலைச் செய்துகொண்டிருக்கிறான். அவனது அச்செயலின் பயன், ஒழுங்கும் இன்பமும் அழகும் வாய்ந்த ஒரு வாழ்க்கையாக அவன் பால் அமையும்.

ஜேம்ஸ் ஆலன்.

முதற்பதிப்பின் சிறப்புப்பாயிரம்.

இந்நூலை ஆக்கியவர் நமது தேசாபிமானியும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும், எனது நண்பரு மாகிய ஸ்ரீமாந். வ. உ. சிதம்பரம் பிள்ளை. இவர் இராஜ நிந்தனைக் குற்றத்திற்காக ஆறு வருடம் நாடு கடத்தல் தீர்ப்பை யேற்றுக் கோயமுத்தூர்ச் சிறைவீட்டில் வாழ்ந்திருந்த காலத்தில் இது இயற்றப்பெற்றது.

இதன் முதனூல் "அகத்திலிருந்து புறம்" என்று பொருள்படும் பெயரைக் கொண்டிருப்பினும், நமது தமிழ் வழக்கிற்கு ஒத்தவாறு இதற்கு "அகமே புறம்" என்று பெயரிடப்பட்டுள்ளது. இதனை நம்மவர் விருப்பொடு கொள்ளுமாறு இதன் முதனூலாசிரியரின் கருத்துக்கட் கிணங்கிய தமிழ் நூலாசிரியர்களின் முதுமொழிகள் சில இதில் ஆங்காங்குச் சேர்க்கப்பட்டுள்ளன.

இதில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் சுலபமாக அடைதற்குத் தக்க மார்க்கங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இதிற் கூறியுள்ளவாறு ஒழுகுபவர் தாம் வேண்டும் இகபர நிலைகளையெல்லாம் அடைவர். இது தமிழ்தெரிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து அவர் வசிக்கும் இடமெல்லாம் நிலவுக. எல்லாம் வல்ல இறைவன் துணை.

சென்னை,
1-4-14.

ஸ்வாமி வனஜானந்தன்.

முதற் பதிப்பின் பாயிரம்.

இந்நூல் ஸ்ரீ. ஜேம்ஸ் ஆலன் இயற்றியுள்ள "அகத்திலிருந்து புறம்" என்று பொருள்படும் பெயரினையுடைய ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதனைக் கற்போர் எளிதாகக் கொள்ளுமாறு இதன் முதனூலிலுள்ள 'உயர்தர வாழ்வு' என்னும் ஓர் அதிகாரத்தை நான்கு சிறிய அதிகாரங்களாக இதில் அமைத்துள்ளேன்.

அறநூல்களைக் கற்று நிற்போரே இந்நூலைச் சொல்வதற்கு உரியர். கைம்மாறு கருதாது, சுருதி, யுத்தி, அநுபவங்களால் விளக்கிச் சொல்லுதலே இதனைச் சொல்லும் முறை. இம்மை மறுமைப் பயன்களை அடைய விரும்புவோரே இதனைக் கற்றற்கும் கேட்டற்கும் உரியர். இதன் பொருள்களைக் கசடறக் கற்றுக் கைக்கொண்டு ஒழுகுதலே இதனைக் கற்கும் முறை.

இந்நூலைத் தமிழறிந்த ஒவ்வோர் ஆடவரும் பெண்டிரும், சிறுவரும் சிறுமியரும், கற்கவேண்டுமென்பதும், இந்நூல் நமது நாட்டில் நிலவும் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டுமென்பதும், இந்நூல் எஞ்ஞான்றும் நின்று நமது நாட்டில் நிலவவேண்டுமென்பதும் எனது விருப்பம்.

சென்னை,
1—4—14.

வ. உ. சிதம்பரம் பிள்ளை.

இப்பதிப்பின் பாயிரம்.

1914-ம் வருஷத்தில் வெளிவந்த இந்நூலின் முதற்பதிப்பில் ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பெற்றன. இந்நூலைத் தமிழ்மக்கள் பலரும் விரும்பியதால் அவ்வாயிரம் பிரதிகளும் விரைவில் செலவாய்விட்டன. அதனால், இந்நூலை இரண்டாம்முறை அச்சிட்டு முடித்தேன். இப்பதிப்பில் ஸ்ரீ ஜேம்ஸ் ஆலன் சரித்திரம் சேர்க்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ. ஜேம்ஸ் ஆலன் நூல்களின் அருமையையும் பெருமையையும் இவ்வுலகம் முழுவதும் பாராட்டுகிறதென்றால், அந்நூல்களில் ஒன்றன் மொழிபெயர்ப்பாகிய இதன் அருமையையும் பெருமையையும் யான் எடுத்துரைத்தல் வேண்டா. மனிதர் இம்மையிலும் மறுமையிலும் அடையத்தக்க உயர்ந்த பதவிகளை நல்கும் மார்க்கங்கள் மிகத் தெளிவாக இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

இப்பதிப்பின் தமிழ்நடையைச் சென்னை, பச்சையப்பன் கல்லூரி, சுதேசபாஷா அத்தியக்ஷகர் ஸ்ரீமாந். தி. செல்வகேசவராய முதலியார் (யம். ஏ,) அவர்கள் அழகுபடுத்தித் தந்தார்கள். இப்பதிப்பை அச்சிடுதற்குச் சென்னை ஹைக்கோர்ட்டு வக்கீலும் சிறந்த தேசாபிமானியுமாகிய சேலம் ம-௱-௱-ஸ்ரீ. ச. இராஜகோபாலாசாரியா ரவர்கள் பொருளுதவி செய்தார்கள். இவ்வுதவிகள் புரிந்த இவ்விரு சீலர்களுக்கும் யான் எஞ்ஞான்றும் நன்றிபாராட்டக் கடவேன்.

பிரம்பூர், சென்னை,
இராக்ஷஸஹு மாசி மீ ௴ } வ.உ. சிதம்பரம் பிள்ளை.

ஜேம்ஸ் ஆலன்.

(சரித்திரச் சுருக்கம்.)

ஜேம்ஸ் ஆலன் என்பவர் இங்கிலாந்து தேசத்தில் லேஸ்டர் என்னும் நகரத்தில் 1864ம்ஹூ நவம்பர் மாசம் 28-ம் தேதி பிறந்தார். அவர் இளமைப் பருவத்திலேயே கல்வியில் மிக்க அவா வுடையவர்; அடிக்கடி தனித்த இடத்திற்குச் சென்று நூல்களை வாசித்துச் சிந்தித்திருப்பவர்; தமது தந்தையாரிடம் ஜீவதத்துவங்களைப்பற்றி வினவுபவர். அவரது தந்தையார் அவ்வினாக்களுக்கு விடைகள் கூற இயலாது தயங்குவதுண்டு. அப்பொழுது அவரே தமது வினாக்களுக்கு விடைகள் கூறுவர். அவற்றைக் கேட்டு அவரது தந்தையார் "மகனே! இவ்வளவு அறிவு ஒரு பிறப்பில் கற்ற கல்வியால் வரத்தக்க தன்று; நீ முன் பல பிறப்புக்களில் கற்றிருக்கிறாய் போலும்." என்று கூறுவார்.

ஆலனது இளமைப் பருவத்தில் அவரது சரீரம் அதிக தூர்ப்பலமாயிருந்தது. அப்படிக்கிருந்தும் அவர் விஷயங்களை அதிகமாக ஆலோசனைசெய்து ஆராய்ச்சி பண்ணுவது வழக்கம்; அதைப் பார்த்த பலர், "நீர் இவ்வளவு தூரம் ஆலோசனைசெய்து ஆராய்ச்சி புரிவதால் உமது சரீரத்திற்குத் தீங்கு விளையக்கூடும்" என்று கூறுவதுண்டு. அவரது தந்தையாரும், "ஆலனே! நீ இவ்வளவு தூரம் உன் மனத்திற்கு வேலை கொடுப்பாயானால் நீ சீக்கிரம் மரணம் அடைவாய்" என்று பல முறை கூறினதுண்டு. இவரது இவ்வார்த்தைகள் பிற்காலத்தில் ஆலனது ஞாபகத்திற்கு வந்தபோதெல்லாம் அவர் புன்சிரிப்பாகச் சிரித்துக்கொள்வர்.

ஆலன் எதனை எதனை எந்த எந்த நேரத்திற் செய்யவேண்டுமோ, அதனை அதனை அந்த அந்த நேரத்தில் தமது முழு மனத்தோடும் செய்துமுடிப்பர். அவர் எதிலும் தமது மனத்தை அரைகுறையாகச் செலுத்துவதில்லை; எதனையும் அரைகுறையாகச் செய்வதுமில்லை. அவர் எதனைச் செய்தாலும் திருத்தமாகவும் பூர்த்தியாகவும் செய்வர். அவரது ஏகாக்கிரசித்தமே அவர் அடைந்த உன்னத பதவிக் கெல்லாம் அடிப்படையாகும். படித்தல், விளையாடல், உண்ணல், உறங்கல் முதலிய சகல செயல்களையும் அவர் கிரமமாகவும் ஒழுங்காகவும் செய்துமுடிப்பர்.

அவர் வாலிபப் பருவத்தை அடைந்த பின்னர் தமது சிநேகிதரோடு நீண்ட தூரம் உலாவச் செல்வர். அவர் தமது மார்க்கத்தில் இயற்கைப் பொருள்களைப் பார்த்துக் களிப்புறுவர். துஷ்டமிருகங்களையும் நெருங்கி அவற்றின் குணநிசயங்களைக் கவனித்து அவற்றினிடத்து அன்பு பாராட்டுவர். அத்துஷ்டமிருகங்களும் அவரிடத்தில் நெருங்கிவந்து அவர் வார்த்தைக்குப் பணிந்து இணங்கி நிற்கும். அவருடைய பதினெந்தாவது வயதில் அவர் தந்தையாரின் ஐசுவரியமெல்லாம் போய்விட்டன. அவரது தந்தையார் தமது குடும்பத்தின் அன்னவஸ்திராதிகளுக்குப் பணம் சம்பாதிக்கும் பொருட்டு அமெரிக்காவுக்குச் சென்றனர். அங்குப் போய்ச் சேர்ந்த இரண்டு தினங்களுக்குள் நியூயார்க் நகர் வைத்தியசாலையில் அவர் இறந்துபோயினர். அவரிடமிருந்து நமது ஆலன் குடும்பத்திற்குக் கிடைத்த செல்வமெல்லாம் அவர் நீண்ட காலமாக வைத்திருந்த வெள்ளிக் கைக்கடிகாரம் ஒன்றே. அவ

ரது மரணத்திற்குப் பின் ஆலன் நாள்தோறும் பதினைந்து மணி நேரம் வேலை செய்து தமது தாயாரையும் தமது இரண்டு சகோதரரையும் பாதுகாத்துவந்தனர். அக்காலத்தில் அவர் தினந்தோறும் மூன்றுநான்கு மணி நேரம் நூல்களை வாசித்துவருவர். "கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும், பெருமையிற் பீடுடைய தில்" என்று நம் வள்ளுவர் கூறியதுபோல, அவரும் "அதிகம் கஷ்டப்பட்டு வேலைசெய்தல் அநேகம் பாஷைகளைக் கற்பதோடொக்கும்" என்று அடிக்கடி கூறுவர்.

ஆலன் பதினேழாவது வயதில் ஆங்கில நாடகக் கவி சிரேஷ்டராகிய ஷேக்ஸ்பியரின் நாடக நூல்களைக் கற்கத் தொடங்கி அவற்றில் பெரும் பாகங்களை மனப்பாடம் செய்துமுடித்தார். அக்காலத்திலும் மற்றைக் காலத்திலும் அவரது லட்சியம் மெய்யுணர்தல் ஒன்றே. அவர் அதற்காகவே பலநூல்களைக் கற்றார். இவ்வுலகத்தில் மனிதர் அநுபவிக்கும் துன்பங்களே நரகமாகுமென்பதும், இன்பங்களே சுவர்க்கமாகுமென்பதும், இவ்வுலகத்திற்கு அந்நியமாக சுவர்க்க நரகங்கள் இல்லையென்பதும் அவரது துணிவு. அவர் ஒழுக்கத்தை ஓர் ஆபரணமாக எக்காலத்தும் கொண்டிருந்தார். அவர் ஜாதியில் ஆங்கிலேயரா யிருந்தும்,(புலாலுண்ணல், மதுவுண்ணல், அந்நிய ஸ்திரீகளுடன் உலாவச் செல்லல், முதலிய கெட்ட பழக்கங்களை ஒருபோதும் கைக்கொண்டவரல்லர்.) அவர் வாக்கினின்று வரும் வார்த்தைகளெல்லாம் பொருள் நிறைந்தனவாயும் இன்பம் பயப்பனவாயும் இருக்கும். அவரைக் கண்ட தீயோரும் நல்லோராய்விடுவர். இதற்குப் பல

சான்றுகள் உண்டு. அவற்றுள் ஒன்று :— அவர் ஒரு காலத்தில் வேலை பார்த்துவந்த ஓர் இடத்தில் சதாகாலமும் கெட்ட வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்த பல வேலைக்காரர்கள் அவர் அங்குப் போய்ச் சேர்ந்த சில நாட்களுக்குள் அவ்வார்த்தைகளை அடியோடு நிறுத்திவிட்டார்கள்.

அவர் தமது இருபத்துநான்காம் வயதில் "ஆசிய தீபம்" (The Light of Asia) என்னும் நூலை வாசித்தார். அந்நூலிலிருந்து அவருக்கு மெய்யுணர்வு உண்டாயிற்று. அது முதற்கொண்டு அவர் நமது நாட்டு நூல்களை மிகுதியாக வாசிக்கத் தொடங்கினர். நமது நாட்டு நூல்களில் அவருக்கிருந்த விருப்பம் வேறு எந்த நாட்டு நூல்களிலும் இல்லை. அவர் "கீழ்நாட்டாரே மெய்ஞ்ஞானக் கருவூலம்" என்று அடிக்கடி கூறுவதுண்டு. அவர் வாக்கினின்று வந்த ஒவ்வொரு வார்த்தையிலும் நமதுநாட்டு நீதியும் மதக்கோட்பாடும் கலந்திருக்கும். (ஒழுக்கம் ஒன்றே மெய்யுணர்வுக்கும் மற்றைய சகல உயர்ந்த பதவிகளுக்கும் மார்க்கம் என்பது அவருடைய சித்தாந்தம்.) அதுபற்றி அவர் என்ஞான்றும் ஒழுக்கத்தைத் தம் உயிரினும் அதிகமாக ஓம்பி வந்தார்.

அவர் தமது முப்பதாம் வயதில் லில்லி ஆலன் என்னும ஓர் ஆங்கில மாதை மணம்புரிந்தார். அவ்வம்மையார் அவரது உடம்பு, மனம், ஆன்மா என்ற மூன்றற்கும் ஓர் ஒப்பற்ற துணையாக அவரோடு கூடி வாழ்ந்து வந்தனர். அவரது முப்பத்திரண்டாம் வயதில் அவருக்கு ஒருபெண் பிறந்தாள். அவளுக்கு நோரா ஆலன் என்று பெயரிட்டனர். அவள் பிறந்தநாள் முதற்

கொண்டு அவர் விஷய இச்சையை விட்டுவிட்டனர் அவர் காலை மூன்று மணிக்கு எழுந்திருந்து தியானத்தில் இருப்பர்; குன்றுகளின் மீது தனித்துச்சென்று ஆன்ம தத்துவங்களைச் சிந்திப்பர்; அவரை அடுத்தோர்களுக்கு ஆன்மஞானத்தை உபதேசிப்பர். "மனிதனது புற நிலைமைகளெல்லாம் அவனது அகநிலைமைகளிலிருந்தே வருகின்றன" என்பதும், "புற நிலைமைகளைத் திருத்துவதற்கு அகநிலைமைகளைத் திருத்தவேண்டும்" என்பதும் அவருடைய முக்கிய உபதேசங்கள்.

அவர் இயற்றியுள்ள பலநூல்கள், அவருடைய பெயர் இவ்வுலகில் என்றென்றும் நின்று நிலவும்படிக்கும், அவரது அறிவையும் ஆற்றலையும் சொல்வன்மையையும் எல்லாரும் புகழும்படிக்கும், செய்கின்றன. அந்நூல்களில் சிலவற்றை யான் மொழிபெயர்த்துள்ளேன். அவை "மனம் போல வாழ்வு," "அகமே புறம்," "வலிமைக்கு மார்க்கம்," "ஊழை வெல்வதற்கு உபாயம்," "முத்திக்கு மார்க்கம்" என்பன. இவற்றில் இதுவரை அச்சிடப்பெறாத கடைசி இரண்டு நூல்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தியபின் அவரது மற்றைய நூல்களையும் மொழிபெயர்த்து வெளியிடுவதாக யான் நிச்சயித்துள்ளேன். அவர் "புத்திவிளக்கம்" (The Light of Reason) என்று ஒரு மாதாந்தப் பத்திரிகை நடத்திவந்தார். அதனை இப்போது வேறொரு பெயருடன் அவரது மனைவியார் நடத்திவருகின்றனர்.

அவர் சரீர ஆரோக்கியம் குன்றிய காலத்தும், அவரது கடைசிக் காலத்தும், அவர் தமது தியானத்தையாவது, தெய்வ சிந்தனையையாவது, பரோபகார வேலையையாவது நிறுத்தியதுமில்லை; குறைத்தது

மில்லை. அவரது சரீர ஆரோக்கியத்தைக் கருதி அவரது மனைவியார் முதலியோர் அவரது வேலைகளைக் குறைக்கவேண்டுமென்று அவரிடத்திற் கூறிய பல சமயங்களிலும், "வேலை செய்வதற்காகவே யான் உடலோடு கூடிப் பிறந்தேன்; வேலை செய்வதற்காகவே யான் உடலோடுகூடி வாழ்கின்றேன்; என் வேலைமுடிந்தவுடனே இவ்வுடலை யான் விட்டுவிடுவேன். நீங்கள் என் வேலையைத் தடுக்கவேண்டாம்." என்று கூறியிருக்கின்றனர். அவர் கடைசியாக 1912-ம் வருஷம் ஜனவரி மாதம் 12-ம் தேதி "எனது வேலைகளையெல்லாம் செய்து முடித்துவிட்டேன். யான் இதுமுதல் எனது தந்தைபாற் செல்வதற்குச் சித்தமாகப் போகின்றேன்." என்று கூறித் தமது வேலைகளைவிட்டு நீங்கித் தமது மனைவியார் முதலியோர் களிப்படையும்படி பல நல்ல காரியங்களைப்பற்றி அவருடன் சம்பாஷித்துக் கொண்டிருந்து, அம்மாதம் 24-ம் தேதி பரமபதம் அடைந்தனர். அவரது சரீரம் மேல்நாட்டு வழக்கப்படிக்கன்றி நமது நாட்டு வழக்கப்படி காஷ்டத்தில் வைத்து எரிக்கப்பட்டது. அவரது ஆவி அறிவு வடிவாக இன்றும் எங்கும் நிறைந்து விளங்குகின்றது.

அகமே புறம்.

காப்பு.

அகமே புறமே அனைத்துமே யாகி
அகமே விளங்கும் அறிவே—'அகமே
புற'மெனச் சொல்லப் புகுந்தஇந் நூலைத்
திறமெனச் சொல்லச் செயும்.

அடக்கம்.

"அடக்க மமரரு ளுய்க்கு" மென் றாசான்
நடக்கும் நெறியை நவில—அடக்கம்
அவாவினிற் கின்றேன் அதுசிறிது மில்லேன்
தவாவள முற்ற தலத்து.

வேண்டல்.

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா 'ரெய்துஞ் சிறப்'பென்றான்--முன்புலவன்
ஆதலினால் எல்லாரும் அன்புற் றறஞ்செய்து
வேதநெறி நின் றுணர்க மெய்.

அகமே புறம்.

அகமும் புறமும்.

அகத்தையொத்தே புறம் (வாழ்வு) அமைகின்றது. அகம் இடைவிடாது புறமாகிக்கொண்டிருக்கின்றது. எதுவும் வெளிப்படாமல் இருப்பதில்லை. எது மறைபட்டிருக்கிறதோ அது சிறிது காலத்திற்கு மட்டுமே மறைபட்டிருக்கிறது. அது முதிர்ந்து கடைசியாக வெளிப்பட்டேவிடுகிறது. வித்து, மரம், மலர், கனி-இவை ஒன்றின்பின் ஒன்றாகவும், ஒன்றிலிருந்து ஒன்றாகவும், எந்த முறையில் வெளிப்பட்டு நிலவுகின்றனவோ அந்த முறையிலேயே பிரபஞ்சமும் நிலவுகின்றது. மனிதனது அகத்தின் நிலைமையிலிருந்து அவனது புறத்தின் நிலைமைகள் தோன்றுகின்றன. அவனது நினைப்புக்கள் அவனுடைய செயல்களாக மலர்கின்றன. அவனது செயல்கள் அவனுடைய ஒழுக்கமும் புறநிலைமையுமாகிய கனிகளைக் கொடுக்கின்றன.

அகமே புறம்.

மரம் எப்பொழுதும் பூமியின் அகத்திலிருந்தே வெளிப்பட்டுக்கொண்டிருத்தல்போல வாழ்வும் எப்பொழுதும் மனிதனது அகத்திலிருந்தே வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. நிலத்துள் புதைபட்டுள்ள வித்துக்கள் நாளடைவில் இலைகளாகவும் மலர்களாகவும் கனிகளாகவும் வெளிப்படுதல்போல, அகத்துள் புதைபட்டுள்ள நினைப்புக்களும் நாளடைவில் சொற்களாகவும் செயல்களாகவும் செய்து முடிக்கப்பட்ட காரியங்களாகவும் வெளிப்படுகின்றன.

மறைபட்டுள்ள ஊற்றுவாய்களிலிருந்து எப்படி ஊற்றுநீர் வெளிப்படுகின்றதோ அப்படியே மனிதனது வாழ்வும் மறைபட்டுள்ள அவனது அகமூலங்களிலிருந்து வெளிப்படுகின்றது. நிகழ் காலத்தில் அவன் எந்நிலைமைகளில் இருக்கிறானோ அவையும், நிகழ்காலத்தில் அவன் எவற்றைச் செய்கிறானோ அவையும், அவன் அகத்திலிருந்தே வந்திருக்கின்றன. எதிர்காலத்தில் அவன்எந்நிலைமைகளில் இருப்பானோ அவையும், எதிர்காலத்தில் அவன் எவற்றைச் செய்வானோ அவையும், அவனது அகத்தினின்றே உற்பத்தியாகும்.

சுகமும் துக்கமும்,மகிழ்வும் கவலையும், துணிவும் அச்சமும், விருப்பும் வெறுப்பும், அறிவும் மடனும்

அகமும் புறமும்

அகத்திலன்றி வேறு எங்கும் இல்லை. அவையாவும் மனோ நிலைமைகளேயன்றி வேறல்ல.

மனிதன் தனது அகத்தின் அரசன்; தனது மனத்தின் காவலன்; தனது வாழ்க்கையாகிய கோட்டையின் தனிக்காப்பாளன். அவன் அந்த முறைமையில் ஊக்கமேனும் தூக்கமேனும் கொண்டிருக்கக் கூடும். அவன் தனது அகத்தை மேலும் மேலும் எச்சரிக்கையுடன் வைத்துக்கொண்டிருக்கக் கூடும். அவன் தனது மனத்தை அதிகப் பிரயாசையோடு பாதுகாத்துச் சுத்தப்படுத்திக்கொள்ளக் கூடும்; அவன் நியாயமற்ற நினைப்புக்களை நினையாது தன்னைக் காத்துக்கொள்ளக்கூடும். இஃது அறிவு விளக்கத்திற்கும் இன்பப்பேற்றிற்கும் மார்க்கம். இதற்கு மாறாக, அவன் தனது ஒழுக்கத்தைச் சரியாகத் திருத்துவதாகிய மேலான கடமையைச் செய்யாது எச்சரிக்கையும் திருத்தமுமின்றி வாழக்கூடும். இஃது அறிவு மயங்குதற்கும் துன்பமடைவதற்கும் மார்க்கம்.

ஒரு மனிதன் தனது வாழ்வு முழுவதும் தனது மனத்தினின்றே வருகிறதென்று அறிவானானால் அப்பொழுதே அவனுக்குப் பேரின்பவீட்டின் வழி திறந்துள்ளதாகும். அவன் அப்பொழுது தனது

மனத்தை ஆள்வதற்கும், தனது இலட்சியத்திற்குத் தக்கபடி தன்னைத் திருத்திக்கொள்வதற்கும் தக்க வலிமை தன்னிடத்தில் இருப்பதைக் காண்பான். அப்படியே அவன் முற்றும் மேம்பாடான நினைப்பையும் செயலையும் மேற்கொண்டு நேராகவும் உறுதியாகவும் நடப்பான். அவனுக்கு வாழ்க்கை இனியதாகவும் தூயதாகவும் அமையும். அவன், சிறிது முன்னாகவோ பின்னாகவோ, சகல தீமைகளையும் சகல கவலைகளையும் சகல துன்பங்களையும் போக்கிவிடுவான். ஏனெனில், தனது அகத்தின் வாயிலைத் தளராத ஊக்கத்துடன் காத்துவருகிற ஒரு மனிதன் ஞானத்தையும் துக்கநிவிர்த்தியையும், சுகப்பிராப்தியையும் அடையாமல் இரான்.

மனத்தின் தன்மையும் வன்மையும்.

மனம் வாழ்வை விதிக்கும் நியந்தா; நிலைமைகளைச் சிருஷ்டித்துத் திருத்தும் கர்த்தா; தனது சொந்த பலன்களை அநுபவிக்கும் போக்தா. பொய்யைச் சிருஷ்டிக்கும் திறனும் மெய்யைக் காணும் திறனும் மனத்திற்கு உண்டு. ஆன்றோரும் "மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி" என்று கூறியுள்ளார்.

மனம் தளர்ச்சியின்றி வாழ்க்கை நிலைமையாகிய வஸ்திரத்தை நெய்துகொண்டிருக்கிறது; நினைப்பு நூல்; நல்ல செயல்களும் தீய செயல்களும் பாவும் ஊடும்; ஒழுக்கம் வாழ்வாகிய தறியில் நெய்யப்படும் வஸ்திரம். மனம் தான் நெய்த வஸ்திரத்தால் தன்னை உடுத்துக்கொள்கிறது.

மனிதன் மனத்தையுடைய உயிராகையால் மனத்தின் சகல சக்திகளையும் உடையவனா யிருக்கிறான் தான் விரும்புவனவற்றை யெல்லாம் அடைதற்குத் தக்க கருவிகளைக் கொண்டிருக்கிறான். அவன் தனது

அநுபவத்தினால் கற்கிறான்; அவன் தனது அநுபவத்தை மிகுக்கவும் குறைக்கவும் கூடும். அவன் பிறரால் எந்த இடத்திலும் கட்டுப்பட்டிருக்கவில்லை; ஆனால், அவன்தானே தன்னைப் பல இடங்களில் கட்டுப்படுத்தியிருக்கிறான்; அவன் தானே தன்னைக் கட்டுப்படுத்தியிருப்பதால், அவன் நினைத்த மாத்திரத்தில் தானே தன்னை அக்கட்டிலிருந்து நீக்கிக்கொள்ளக்கூடும். அவன்தான் விரும்புகிறபடி தீயனோ அல்லது தூயனோ, கீழோனோ அல்லது மேலோனோ, மடையனோ அல்லது அறிஞனோ ஆகக்கூடும். அவன் சில செயல்களைத் திரும்பத் திரும்பச் செய்து பழக்கங்களாக்கிக்கொள்ளலாம்: அவன் அவற்றிற்கு மறுதலையான செயல்களை மேன்மேலும் செய்து அப்பழக்கங்களை அழித்துவிடலாம். அவன் மெய்ப்பொருள் முழுவதும் தனக்கு மறைபடும் வரையில் தன்னைச் சுற்றிப் பொய்களை அமைத்துக்கொள்ளக் கூடும்; அவன் மெய்ப்பொருளைப் பூரணமாகக் காணும் வரையில் தன்னைச் சுற்றியுள்ள பொய்களை ஒன்றன்பின் ஒன்றாக அழித்துவிடக்கூடும். அவன் செய்யக் கூடியன அளவற்றன; அவன் பூரண சுதந்தரத்தை யுடையவன். ஆன்றோரும்

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்

மனத்தின் தன்மை.

மேன்மே லுயர்த்தி நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்."

என்று கூறியுள்ளார்.

தனது சொந்த நிலைமைகளைச் சிருஷ்டித்துக் கொள்வதற்கும், தான் வாழ்வதற்குத் தக்க நிலைகளைத் தெரிந்துகொள்வதற்கும் ஏற்ற சக்தி மனத்தினிடத்தில் உண்டு. மனம் எந்த நிலைமையையும் மாற்றுதற்கும், எந்த நிலைமையையும் விட்டொழித்தற்கும் வல்லமையுடையது. ஆன்றோரும்

"கெடுக்க வல்லதுங் கெட்டவர் தங்களை
யெடுக்க வல்லதும் இம்மனம்........"

என்று கூறியுள்ளார்.

அது பல நிலைமைகளை ஒன்றன்பின் ஒன்றாக அநுபவித்து அவற்றின் ஞானத்தை அடையுங் காலையில் தனது நிலைமைகளை ஒன்றன்பின் ஒன்றாக மாற்றிக் கொண்டும் கைவிட்டுக்கொண்டும் இருக்கிறது.

உள்நோக்கும் நினைப்புக்கள் ஒழுக்கத்தையும் வாழ்வையும் உண்டு பண்ணுகின்றன; நினைப்புக்களை மனிதன் தனது விருப்பத்தாலும் முயற்சியாலும் திருத்திக்கொள்ளவும் மாற்றிக்கொள்ளவும் கூடும். பழக்கமும் பலவீனமும் பாவமுமாகிய தளைகள் தன்னாலேயே

உண்டுபண்ணப்படுகின்றவை; அவை தன்னால் மாத்திரம் அழிக்கப்படக்கூடும்; அவை ஒருவனுடைய மனத்திலன்றி வேறெங்கும் இல்லை; அவை புறப்பொருள்களோடு சம்பந்தப்பட்டிருந்த போதிலும், அவை உண்மையில் அப்புறப்பொருள்களின்கண் இல்லை. புறம் அகத்தால் ஆக்கவும் திருத்தவும் படுகின்றது. அகம் ஒருபோதும் புறத்தால் ஆக்கப்படுவதும் திருத்தப்படுவதும் இல்லை. மனக் கவர்ச்சிக்கு ஏது புறப்பொருளில் இல்லை; ஆனால், அப்பொருளின் மீது மனம் கொண்டிருக்கிற ஆசையில் இருக்கிறது. துன்பமும் கவலையும் புறப்பொருள்களிலும் வாழ்வின் சம்பவங்களிலும் ஒட்டிக்கொண்டிருக்கவில்லை; அப்பொருள்களையோ அல்லது சம்பவங்களையோ பற்றிய மனத்தின் ஓர் ஒழுங்கீன நிலைமையில் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. (தூய்மையால் ஒழுங்குசெய்யப்பட்டு, ஞானத்தால் பலப்படுத்தப்பட்ட மனம் பிரிக்கக்கூடாத வண்ணம் துன்பத்தோடு கட்டப்பட்டுள்ள சகல அவாக்களையும் காமங்களையும் ஒழித்துத் தெளிவையும் சாந்தியையும் அடைகிறது.)

பிறரைக் கெட்டவர் என்றலும், கெடுதிக்கு மூலம் புறநிலைமைகள் என்றெண்ணி அவற்றோடு போராடுதலும் உலகத்தின் துன்பத்தையும் அமைதியின்

மையையும் அதிகப்படுத்துவதன்றிக் குறைப்பதில்லை. புறம் அகத்தின் நிழல், அகத்தின் காரியம். அகம் சுத்தமாயிருக்கும் பொழுது புறத்திலுள்ள சகல காரியங்களும் சுத்தமா யிருக்கின்றன. ஆன்றோரும்

> "கற்றதங் கல்வியுங் கடவுட் பூசையும்
> நற்றவம் இயற்றலும் நவையில் தானமும்
> மற்றுள அறங்களும் மனத்தின் பாலழுக்
> கற்றவர்க் கேபயன் அளிக்கு மென்பரால்."

என்று கூறியுள்ளார்.

சகல வளர்ச்சியும் வாழ்வும் அகத்திலிருந்து புறத்திற்கு வருகின்றன; சகல தேய்வும் அழிவும் புறத்திலிருந்து அகத்திற்குச் செல்கின்றன. இது பிரபஞ்சத்தின் ஒரு பொதுவிதி.

சகல விரிவுகளும் அகத்திலிருந்து நிகழ்கின்றன; சகல திருத்தங்களும் அகத்தில் செய்யப்படவேண்டும். எவன் பிறரோடு போராடுதலை விட்டுத் தனது மனத்தைத் திருத்துவதிலும், பலப்படுத்துவதிலும் வளர்ப்பதிலும் தனது சக்திகளைப் பிரயோகிக்கிறானோ, அவன் தனது சக்திகளையெல்லாம் ஒருமுகப்படுத்தித் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுகிறான்; அவன் தனது மனத்தைச் சமநிலையில் நிற்கச் செய்தபொழுது

தனது இரக்கத்தாலும் ஈகையாலும் பிறரையும் அந்த நல்ல நிலைமைக்குக் கொண்டுவருகிறான்; ஏனெனில், ஒருவன் பிறருடைய மனத்தை நடத்துவதும் ஆளுவதும் ஞானத்துக்கும் சாந்திக்கும் வழிகள் அல்ல; தனது சொந்த மனத்தின்மீது தனது நியாயமான அதிகாரத்தைச் செலுத்துவதும் உயர்ந்த ஒழுக்கங்களாகிய சன்மார்க்கங்களில் தன்னை நடத்துவதும், ஞானத்துக்கும் சாந்திக்கும் வழிகள்.

ஒருவனுடைய வாழ்வு அவனது அகத்தினின் மனத்தினின்றும் வருகிறது. அவன் தனது சொந்த நினைப்புக்களையும் கலந்து உண்டுபண்ணியிருக்கிறான். வண்டும் நினைப்புக்களைத் தெரிந்தெடுத்துத் தனது மனத்தைத் திருத்தும் சக்தியை உடையவன். ஆகையால், அவன் தனது வாழ்வையும் திருத்திக்கொள்ளக் கூடும். ஆன்றோரும்

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

என்று கூறியுள்ளார்.

பழக்கத்தை உண்டாக்கல்.

நிலைத்த மனோநிலைமை ஒவ்வொன்றும் மனிதனால் ஏற்பட்ட பழக்கம்; அது திரும்பத் திரும்பத் தொடர்ந்து நினைக்கப்பட்டதால் பழக்கமாகி யிருக்கிறது. தளர்ச்சியும் உற்சாகமும், வெகுளியும் பொறுமையும், இவறன்மையும் ஈகையும், உண்மையில் மனத்தின் சகல தன்மைகளும், மனிதனால் தெரிந்து கொள்ளப்பட்ட நினைப்புக்கள். அவை தாமாக நிகழும் வரையில் திரும்பத் திரும்ப நினைக்கப்பட்டுப் பழக்கங்களாகி யிருக்கின்றன; அடிக்கடி நினைக்கப்பட்ட ஒரு நினைப்பு கடைசியில் மனத்தின் ஒரு ஸ்திரமான பழக்கமாகின்றது. அத்தகைய பழக்கங்களிலிருந்து வாழ்க்கை வருகின்றது.

தனது அநுபவங்களைத் திரும்பத் திரும்பக் கொள்ளுதலால் அறிவை யடையும் இயற்கை யுள்ளது மனம். முதலில் கிரகிப்பதற்கும் சிந்திப்பதற்கும் அதிகப் பிரயாசையாகத் தோன்றும் ஒருநினைப்பு அடிக்கடி மனத்திற் கொள்ளப்படுதலால் பழக்கமும் இயற்கையும் ஆகின்றது. ஒரு சிறுவன் ஒரு கைத்தொழிலைக் கற்கத் தொடங்குங் காலத்தில் தனது கருவிகளைச்

சரியாகப் பிடிக்கவும் முடியாது, உபயோகிக்கவும் முடியாது. ஆனால், அவன் திரும்பத் திரும்ப நீண்ட காலம் அப்பியாசம் செய்தபின்னர் அவற்றை மிகச் சுலபமாகவும் சாமர்த்தியமாகவும் உபயோகிக்கிறான். அதுபோல, (முதலில் அடைவதற்கு முடியாததாகத் தோற்றும் ஒரு மனோபாவம் விடாமுயற்சியாலும் அப்பியாசத்தாலும் கடைசியில் அடையப்பட்டு, முயற்சியின்றி இயற்கையாக நிகழ்கின்ற ஒரு நிலைமை ஆகின்றது.)

தனது பழக்கங்களையும் நிலைமைகளையும் ஆக்கற்கும் திருத்தற்கும் மனத்திற்கு வலிமையுண்டு. இவ்வலிமை மனிதனது முத்திக்குக் காரணமாக இருப்பதுந்தவிரத் தன்னை ஆளுதலால் அடையப்படும் பூரண சுதந்தரத்தையடையும் வழியையும் காட்டுகிறது. ஏனெனில், ஒருமனிதன் தீய பழக்கங்களை உண்டுபண்ணிக்கொள்ளும் சக்தியை உடையவனாயிருப்பது போல நல்ல பழக்கங்களை உண்டுபண்ணிக்கொள்ளும் சக்தியையும் உடையவனாயிருக்கிறான். இப்பொழுது நான் சொல்லும் விஷயத்தைச் சிறிது விளக்கிக் கூறுவது ஆவசியகம். இதனைப் படிப்பவரும் ஆழ்ந்து கவனிக்கவேண்டும்.

சரியான காரியத்தைச் செய்தலினும் பிசகான காரியத்தைச் செய்தல் எளிதென்றும், புண்ணியத்

தைச் செய்தலினும் பாவத்தைச் செய்தல் எளிதென்றும், சாதாரணமாகச் சொல்லப்படுகிறது. அந்நிலைமை அநேகமாக எல்லோராலும் நித்தியத்தன்மை யுடையதெனக் கொள்ளத்தக்க தாகிவிட்டது. ஆசிரிய சிரேஷ்டரான புத்தரும் "தீய வினைகளையும் நமக்குத் துன்பத்தைத் தரும் வினைகளையும் செய்தல் எளிது; நல்ல வினைகளையும் நமக்கு இன்பத்தைத் தரும் வினைகளையும் செய்தல் அரிது" என்று கூறி யுள்ளார். இது மனித சமூகம் சம்பந்தப்பட்ட மட்டில் உண்மையானாலும், மனிதர் அபிவிர்த்தியடையும் மார்க்கத்தில் கண்டு கழிக்கும் ஒரு அநுபவமே யன்றிப் பொருள்களின் ஸ்திரமான நிலைமையன்று; நித்தியத்தன்மையுடையதன்று. சரியான காரியத்தைச் செய்தலினும் பிசகான காரியத்தை செய்தல் மனிதர்களுக்குச் சுலபமாகத் தோற்றுவதற்குக் காரணம் அவர்களிடத்துள்ள மடமையும் அவர்கள் வாழ்வின் நோக்கத்தையும் பயனையும் அறியாமையுமேயாம். ஒரு குழந்தை எழுதுதற்குக் கற்றுக்கொள்ளுங் காலையில் எழுதுகோலைப் பிசகாகப் பிடித்தலும் அக்ஷரங்களைப் பிசகாக எழுதுதலும் அதற்கு மிகச் சுலபமாகவும், எழுதுகோலைச் சரியாகப் பிடித்தலும் அக்ஷரங்களைச் சரியாக எழுதுதலும் அதற்கு மிகப் பிரயாசையாகவும் தோன்றுகின்றன, விடாமுயற்சியாலும் அப்பியாசத்

தாலும் ஒழிக்கக்கூடிய எழுதுதற் றொழிலின் அறியாமை அதனிடத் திருத்தலான். கடைசியாக அவ்வஞ்ஞானம் நீங்கிய பின்னர் எழுதுகோலைச் சரியாகப் பிடித்தலும், அக்ஷரங்களைச் சரியாக எழுதுதலும் அக்குழந்தைக்கு இயற்கையும் சுலபமு மாகிவிடுகின்றன. அக்காலத்தில் பிசகான காரியத்தைச் செய்தல் பிரயாசையாகவும் முற்றிலும் அநாவசியமாகவும் அதற்குத் தோற்றுகிறது. இவ்வுண்மை மனத்தின் காரியங்கட்கும் வாழ்க்கையின் காரியங்கட்கும் சமமாகப் பொருந்தும். (சரியான காரியத்தை நினைத்தற்கும் செய்தற்கும் அதிக அப்பியாசமும் விடாமுயற்சியும் வேண்டும்; சரியான காரியத்தை நினைத்தலும் செய்தலும் இறுதியில் இயற்கையும் சுலபமு மாகின்றன; அப்பொழுது பிசகான காரியத்தைச் செய்தல் பிரயாசையாகவும் முற்றிலும் அநாவசியகமாகவும் தோற்றுகின்றது.)

(ஒரு சிற்பி அப்பியாசத்தினால் தனது தொழிலில் தேர்ச்சியடைதல் போல ஒரு மனிதன் அப்பியாசத்தினால் நல்வினையில் தேர்ச்சியடைதல் கூடும்;) அது புதிய நினைப்புக்களால் புதிய பழக்கங்களை உண்டு பண்ணுதலே யன்றி வேறன்று; எவனுக்குச் சரியான நினைப்புக்களை நினைத்தலும் சரியான செயல்களைச்

செய்தலும் சுலபமாகவும், பிசகான நினைப்புக்களை நினைத்தலும் பிசகான செயல்களைச் செய்தலும் பிரயாசமாகவும் தோற்றுகின்றனவோ, அவன் எல்லாவற்றிலும் உயர்ந்த ஒழுக்கத்தையும் ஒப்புயர்வற்ற தூய ஆன்மஞானத்தையும் அடைந்துவிட்டான்.

மனிதருக்குப் பாவங்களைச் செய்தல் சுலபமாகவும் இயற்கையாகவும் இருக்கிறது, அவர்கள் திரும்பத் திரும்ப நினைத்துத் தீய பழக்கங்களை உண்டுபண்ணியிருத்தலான். சமயம் வாய்த்த பொழுது திருடன் திருடாதிருத்தல் மிகப் பிரயாசை. ஏனெனில், அவன் நீண்ட காலம் பிறர் பொருளைக் கவரும் நினைப்புக்களிலும் பேராசை நினைப்புக்களிலும் வாழ்ந்திருக்கிறன். ஆனல், அத்தகைய பிரயாசை நீண்டகாலம் நேர்மையும் நியாயமுமுள்ள நினைப்புக்களில் வாழ்ந்து வந்த ஒரு யோக்கியனுக்கு உண்டாவதில்லை. ஏனெனில், அவன் திருட்டின் குற்றத்தையும் மடமையையும் பயனின்மையையும் அறிந்திருப்பதனல் திருட்டு நினைப்பு எள்ளளவும் அவன் மனத்துள் பிரவேசியாது. திருடுதல் மிகக்கொடிய பாவம்; பழக்கத்தை உண்டாக்குதலையும் பழக்கத்தின் வலிமையையும் தெளிவாக விளக்குதற்காக இவ்வுதாரணத்தைக் காட்டினேன். ஆனல், சகல பாவங்களும் புண்ணியங்களும் இவ்

வாறே உண்டாகின்றன. கோபத்தையும் ஆத்திரத்தையும் கொள்ளுதல் ஆயிரக் கணக்கான ஜனங்களுக்குச் சுலபமாகவும் சுபாவமாகவும் இருக்கிறது, அவர்கள் கோப நினைப்புக்களையும் ஆத்திர நினைப்புக்களையும் அடிக்கடி நினைத்துக்கொண்டிருத்தலான். அவற்றை நினைக்குந் தோறும் அவற்றிற் கேற்ற சுபாவம் அதிக உறுதியாகவும் ஆழமாகவும் வேரூன்றுகிறது. (இவ்வாறே, அமைதியும் பொறுமையு முள்ள ஒரு நினைப்பைப் பிரயாசைப்பட்டுக் கிரகித்து, ஆத்திரமும் வெகுளியும் வேரோடு நீங்கும்வரையில் அதனை இடைவிடாது நினைத்துக்கொண்டு வருதலால், அமைதியும் பொறுமையும் சுபாவங்களாய்விடும். இங்ஙனமே ஒவ்வொரு பிசகான நினைப்பையும் மனத்தைவிட்டு வெளியேற்றிவிடலாம்; இப்படியே ஒவ்வொரு பொய்ச்செயலையும் ஒழித்துவிடலாம்; இப்படியே ஒவ்வொரு பாவத்தையும் வென்றுவிடலாம்.

செய்தலும் அறிதலும்.

ஒரு மனிதன் தனது வாழ்வு முழுமையும் தனது மனத்திலிருந்து வருகிறதென்றும், அம்மனம் தனது பொறுமையான முயற்சியால் வேண்டுமளவு திருத்தப்படக்கூடிய பழக்கங்களின் சேர்க்கையென்றும், தனது மனத்தைத் தனது முயற்சியால் முற்றிலும் அடக்கி ஆளக்கூடுமென்றும் அறிந்தானானல், அக்கணமே அவன் பேரின்ப வீட்டின் கதவைத் திறக்கும் திறவுகோலை அடைந்தவனாகிறான்.

“ நின்னை அறப்பெறு கிற்கிலேன் நன்னெஞ்சே !
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்—நின்னை
அறப்பெறு கிற்பேனேல் பெற்றேன்மற் றீண்டே
துறக்கந் திறப்பதோர் தாள்.”

ஒருவனது வாழ்க்கையின் கேடுகள் அவனது மனத்தின் கேடுகளே. அவற்றின் நிவிர்த்தி அகத்திலிருந்து கிரமமாக உண்டாகவேண்டுமே யன்றிப் புறத்திலிருந்து திடீரென்று செய்து கொள்ளத்தக்க தன்று. நாள்தோறும், நாழிகை தோறும், மாசற்ற நினைப்புக்களை நினைத்தற்கும், குற்றத்துள்

ளும் கலக்கத்துள்ளும் விழக்கூடிய சந்தர்ப்பங்களில் குற்றமும் கலக்கமு மற்ற நிலைமைகளைக் கொள்ளு தற்கும் மனத்தைப் பழக்கவேண்டும். கருங்கல்லில் வேலைசெய்கிற பொறுமையுள்ள சிற்பியைப்போன்று, சரியான வாழ்க்கையை அடையக் சோருகிற மனிதன் தனது மனமாகிய கருங்கல்லிலிருந்து தனது மிகவும் அருமையான கனவுகளின் இலட்சியத்தை அடையும் வரையில் ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக வேலை செய்துவரவேண்டும்.

அத்தகைய மேலான காரியசித்திக்கு வேலை செய்வதில், மிகத் தாழ்ந்தனவும் மிகச் சுலபமாக ஏறக் கூடியனவுமான படிகளினின்று புறப்பட்டு, அவற்றி னும் சிறிது உயர்ந்தனவும் சிறிது பிரயாசையுடன் ஏறத்தக்கனவுமான படிகளின் மூலமாக, மிக உயர்ந் தனவும் மிக்க பிரயாசத்துடன் ஏறத்தக்கனவுமான நிலைகளுக்குச் செல்லவேண்டும். கிரமமாக மேல் நோக்கி இயல்பில் நிகழாநின்ற வளர்ச்சி, விரிவு, திரிபு, விருத்தி இவற்றின் நியதி ஒவ்வொரு வகை வாழ்விலும் காரியசித்தியிலும் உண்டு. எவ்விடத்தில் இந்நியதி கவனிக்கப்படவில்லையோ அவ்விடத்தில் எல்லாம் தவறுதலாக முடியும். கல்வியைக் கற்பதிலோ, ஒரு கைத்தொழிலைப் பயில்வதிலோ, அல்லது ஒரு

வாணிகத்தை நடத்துவதிலோ, இச்சட்டத்தை எல்லாரும் பூரணமாக அறிந்து, அதற்கு முற்றிலும் கீழ்ப்படிகின்றனர். ஆனால், ஒழுக்கத்தை ஈட்டுவதிலும், மெய்ப்பொருளை அறிவதிலும், வாழ்க்கையின் ஞானத்தை அடைவதிலும், வாழ்க்கையைச் சரியாக நடத்துவதிலும் இந்தச் சட்டத்தைப் பெரும்பாலார் அறிவதுமில்லை, அதற்குக் கீழ்ப்படிவதுமில்லை. ஆதலால், ஒழுக்கம், மெய்ப்பொருள், பூரணவாழ்வு இவற்றைப் பெரும்பாலார் அப்பியசியாமலும், அடையாமலும், அறியாமலும் இருக்கின்றனர்.

உயர்தர வாழ்வு நூல்களை வாசிப்பதிலும், தெய்வத்தையும் மனத்தையும் பற்றிவழங்கும் உரைகளைப் பேசுவதிலும் அடங்கியிருக்கிறதென்றும், இந்த மார்க்கத்தால் ஆன்மதத்துவங்களை அறியக்கூடுமென்றும் (கருதுதல் சாதாரணமாகக் காணப்படும் ஒரு பிழை. நினைப்பிலும், சொல்லிலும், செயலிலும் மேம்பட்டு வாழ்தலே உயர்தர வாழ்வு.) மனிதனது அகத்திலும், பிரபஞ்சத்திலும், அடங்கியிருக்கிற ஆன்மதத்துவங்களின் ஞானத்தை நீடித்த சீர்திருத்தத்தாலும் ஒழுக்கத்தாலுமே அடையக்கூடும்.

ஒரு பெரிய காரியத்தை அறியும் முன்னர் அதற்குச் சிறிய காரியத்தைப் பூரணமாகக் கிரகித்து அறிய

வேண்டும். எப்பொழுதும் அப்பியாசம் உண்மை ஞானத்திற்கு முற்பட்டது. உபாத்தியாயர் மாணவர்களுக்கு முதலில் கணிதங்களின் நுண்ணிய தத்துவங்களைக் கற்பிப்பதில்லை; அப்படிச் செய்வதால் கற்பித்தல் வீணுகுமென்பதும் கற்றல் முடியாதென்பதும் அவருக்குத் தெரியும். அவர் முதலில் ஒரு சுலபமான கணக்கை அவர்களுக்குப் போடுகிறூர்; அதை அவர்களுக்கு விளக்கிக் காட்டி, அவர்களை அதைச் செய்யும்படி விட்டுவிடுகிறூர். அவர்கள் திரும்பத் திரும்பத் தவறி, மேலும் மேலும் முயன்று, அதைச் சரியாக முடித்த பின்னர், அதனினும் அதிக கடினமான ஒரு கணக்கை அவர்களுக்குப் போடுகிறூர்; அவர்கள் அதைமுடித்த பின்னர், அதனினும் அதிக கடினமான கணக்குகளை ஒவ்வொன்றுகப் போடுகிறூர். மாணவர்கள் அநேக வருஷ காலம் சிரத்தையோடு முயன்று கணக்குப் புத்தகத்திலுள்ள சகல கணக்குகளையும் செய்து முடித்தற்கு முன்னர்க் கணிதங்களின் நுண்ணிய தத்துவங்களைக் கற்பிக்க அவர் எத்தனிப்பதில்லை.

ஒரு கைத்தொழிலில், உதாரணமாக ஒரு சிற்பியின் வேலையில், சிறுவனுக்கு முதலில் சிற்ப தத்துவங்களைக் கற்பிப்பதில்லை. ஆனல், அவன் கையில் ஒரு

சுலபமான கருவியைக் கொடுத்து, அதைக்கொண்டு வேலை செய்யும் விதத்தை அவனுக்குச் சொல்லுகின்றனர். பின்னர் முயற்சியாலும், அப்பியாசத்தாலும், அதைக் கொண்டு வேலை செய்யும்படி அவனை விட்டுவிடுகின்றனர். அவன் தனது கருவிகளைச் சரியாக உபயோகித்து வேலை செய்யத் தெரிந்துகொண்ட பின்னர், அவனுக்கு ஒன்றன்பின் ஒன்றாக அதிக கடினமான வேலைகளைக் கொடுக்கின்றனர்; அப்படியே அவன் அநேக வருஷங்கள் கடினமான வேலைகளையெல்லாம் செய்து சிற்ப வேலையின் தத்துவங்களைக் கிரகித்துக் கற்றுக்கொள்ளத் தகுதி யுடையவனான பின்னர் அவற்றை அவனுக்குக் கற்பிக்கின்றனர்.

சரியாக ஆளப்படும் ஒரு குடும்பத்தில், குழந்தை முதலில் கீழ்ப்படியவும், சகல சந்தர்ப்பங்களிலும் சரியாக நடந்துவரவும் கற்பிக்கப்படுகிறது. குழந்தை ஏன் கீழ்ப்படியவேண்டும் என்றாவது, ஏன் சரியாக நடக்கவேண்டும் என்றும் அதற்குச் சொல்வதில்லை; ஆனால், அவற்றைச் செய்யும்படி அதற்குக் கண்டிப்பான உத்தரவு கொடுக்கின்றனர். அது சரியான காரியத்தையும் நியாயமான காரியத்தையும் செய்துகொண்டுவருகிறதென்று கண்ட பின்னரே, ஏன் அப்படிச் செய்யவேண்டும் என்று அதற்குச் சொல்லுகின்

றனர். எந்தப் பிதாவும், தனது குழந்தை தன்னிடத்தும் தன் சுற்றத்தாரிடத்தும் நடக்கவேண்டிய ஒழுங்கில் நடக்கும் வரையில் அதற்கு ஒழுக்க தத்துவங்களைப் போதிக்க எத்தனிப்பதில்லை.

இங்ஙனம், சாதாரண லௌகிக காரியங்களிலும், அப்பியாசம் அநுபவ ஞானத்திற்கு முற்பட்டது. ஆன்ம காரியங்களில், உயர்தர வாழ்வைச் செலுத்துவதில், இச்சட்டத்திற்கு முற்றும் கீழ்ப்படிதல் வேண்டும். ஒழுக்கத்தை அநுஷ்டிப்பதாலேயே ஒழுக்கத்தை அறியக்கூடும். ஒழுக்கத்தை அநுஷ்டிப்பதில் சான்றோனை பின்னரே ஒருவன் மெய்ஞ்ஞானத்தை அடையக் கூடும். ஒழுக்கத்தை அப்பியசிப்பதிலும் அநுஷ்டிப்பதிலும் நிறைவடைதலே மெய்ஞ்ஞானத்தில் நிறைவடைதலான சாதனம்.

முதலில் மிகச் சுலபமான ஓர் ஒழுக்கத்தை அப்பியசித்து, அதன்பின் அதனினும் அதிக கடினமான ஒழுக்கங்களை ஒன்றன்பின் ஒன்றாக அப்பியசித்து, எல்லா ஒழுக்கங்களையும் கைக்கொண்ட பின்னரே மெய்ப்பொருளை அடையக்கூடும். ஒரு மாணவன் பாடசாலையில் தனது பாடங்களை, சகல தவறுகளும் கஷ்டங்களும் நீங்கும் வரை மேன்மேலும் முயன்று பொறுமையோடும் பணிவோடும் படித்துக்கொண்டு

வருதல்போல,(மெய்ப்பொருளை அடையமுயலும் மாணவனும் தவறுகளால் தளராது, கஷ்டங்களால் பலமடைந்து, சரியான நினைப்புக்களை நினைத்துக் கொண்டும், சரியான செயல்களைச் செய்துகொண்டும் வரவேண்டும் ; ஒழுக்கத்தைக் கைக்கொண்ட பொழுது அவன் மனம் மெய்ஞ்ஞானத்தில் விரிவுறுகின்றது ; அம் மெய்ஞ்ஞானமே அவன் க்ஷேமமாக அமரத்தக்க நிலை.)

உயர்தர வாழ்வு.

ஒழுக்க மார்க்கமே ஞானத்திற்கு மார்க்கம் என்றும், சர்வ வியாபக மெய்ப்பொருளின் தத்துவங்களை அறியும் முன்னே கீழ்ப்பட்ட சாதனங்களை முற்றும் கைக்கொள்ளவேண்டும் என்றும் கண்டோம். மெய்ப்பொருளை அடைய முயலும் மாணவன் தொடங்குவது எப்படி? தனது மனத்தை ஒழுங்குபடுத்தவும் தனது அகத்தை—வாழ்க்கையின் சகல காரியங்களுக்கும் மூலமாகவும் ஊற்றாகவும் இருக்கிற அகத்தை—சுத்தப்படுத்தவும் கோருகிற ஒருவன், ஒழுக்கத்தின் பாடங்களைக் கற்று வாழ்க்கையின் கேடுகளையும் அஞ்ஞானத்தையும் ஒழித்து ஞானபலத்தினால் தன்னை வளர்ப்பது எப்படி? முதற் பாடங்கள் எவை? முதற் சாதனங்கள் எவை? அவற்றைக் கற்பது எப்படி? அவற்றை அப்பியசிப்பது எப்படி? அவற்றை ஆண்டு அறிவது எப்படி?

ஆன்ம அபிவிர்த்திக்குப் பொதுத் தடைகளாகவும் மிகச் சுலபமாக நீக்கத் தக்கவைகளாகவும் இருக்கிற பிசகான மனோநிலைமைகளை ஒழிப்பதும்,

குடும்பத்தையும் சுற்றத்தையும் பற்றிய ஒழுக்கங்களைக் கைக்கொள்வதும், முதற் சாதனங்கள். அவை பத்து. இந்நூலைப் படிப்பவர் எளிதில் உணரும் பொருட்டு அவற்றைப் பின்வரும் மூன்று பாடங்களாகப் பகுக்கின்றேன் :—

தள்ளவேண்டிய தீயொழுக்கங்கள்.

சரீரத்தின் தீயோழுக்கங்கள்.

1. சோம்பல்.
2. மிதூண்.

} முதற்பாடம். சரீரத்திருத்தம்.

நாவின் தீயோழுக்கங்கள்.

1. புறங்கூறல்.
2. பயனில சொல்லல்.
3. நிந்தித்தல்.
4. புன்மொழி பகரல்.
5. குதர்க்கம்பேசல்.

} இரண்டாம் பாடம். நாத் திருத்தம்.

கொள்ளவேண்டிய நல்லொழுக்கங்கள்.

1. நிஷ்காமிய கருமம்.
2. அசையாத நடுவுநிலைமை,
3. அளவற்ற பொறுமை.

} மூன்றும் பாடம். மனத் திருத்தம்.

சரீரத்தின் தீயொழுக்கங்கள் இரண்டும், நாவின் தீயொழுக்கங்கள் ஐந்தும், முறையே சரீரத்திலும் நாவிலும் தோற்றுதலாலும், அவ்வாறு பெயரிட்டுப்

பகுத்தல் வாசிப்பவருக்கு உதவியாக இருக்குமாதலாலும், சரீரத்தின் தீயொழுக்கங்கள் என்றும் நாவின் தீயொழுக்கங்கள் என்றும் சொல்லப்பட்டன; ஆனால், இத் தீயொழுக்கங்கள் மனத்திலிருந்தே உண்டாகின்றன என்றும், சரீரத்திலும் நாவிலும் வேலை செய்கிற அகத்தின் பிசகான நிலைமைகள் என்றும் தெளிவாக அறிதல் வேண்டும்.

அத்தகைய ஒழுங்கற்ற நிலைமைகள், வாழ்க்கையின் மெய்யான நோக்கத்தையும் பிரயோஜனத்தையும் மனம் சிறிதும் அறியவில்லை என்பதைக் காட்டும் அறிகுறிகள். அவற்றின் நீக்கம், ஒழுக்கமும் உறுதியும் அறிவுமுள்ள ஒரு வாழ்க்கையின் தொடக்கத்தைக் காட்டும் அறிகுறி.

ஆனால், அத்தீயொழுக்கங்களை ஒழிப்பதற்கு மார்க்கம் யாது? முதலில் அவற்றின் புறத்தோற்றங்களைத் தாழ்க்காது தடுத்துநிறுத்தலும், பிசகான செயல்களைச் செய்யாதுவிடுதலுமே மார்க்கம். இது, எச்சரிக்கையாக இருத்தற்கும், சிந்தித்துப் பார்த்தற்கு முரிய சக்தியை மனத்துக்குக் கொடுக்கும்; இச்சக்தியால் மனம் மேற்சொல்லிய தீயொழுக்கங்களின் உற்பத்திக்கு மூலங்களாக இருக்கிற இருண்ட பிசகான அகநிலைமைகளைக் கண்டு முற்றிலும் ஒழித்துவிடும்.

உயர்தர வாழ்வு :

முதற் பாடம்.

மனத்தை ஒழுங்குபடுத்துவதில் முதல் சாதனம் சரீரத்தின் சோம்பலை ஒழித்தல். இதுதான் மிகவும் சுலபமான சாதனம் ; இச்சாதனத்தைக் குறையற அநுஷ்டித்து முடிக்கும்வரையில் வேறு சாதனங்களில் பிரவேசிக்கக்கூடாது. சோம்பலை மேற்கொண்டு நிற்றல் மெய்ப் பொருளின் மார்க்கத்திற்கு ஒரு பெருந்தடை. சோம்பலாவது வேண்டிய அளவுக்கு அதிகமாக சௌகரியத்தையும் நித்திரையையும் சரீரத்திற்குக் கொடுத்தலும், விரைவில் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாது தாமதித்தலும், பின் வாங்குதலும், அசட்டை செய்தலுமாம். சரீரத்தை அதிகாலையில் எழுப்புதலாலும், சரீரத்தின் சிரம பரிகாரத்திற்கு அவசியமான அளவு நித்திரையை அதற்குக் கொடுத்தலாலும், ஒவ்வொரு வேலையையும் கடமையையும், எவ்வளவு அற்பமாயிருந்தாலும், உடனுக்குடனே ஊக்கத்தோடும் சுறுசுறுப்போடும் செய்தலாலும் இச்

சோம்பலாகிய நிலைமையைக் களையவேண்டும். எக்காரணத்தாலும் படுத்துக்கொண்டிருக்கும்போது உணவாவது பானமாவது உட்கொள்ளக் கூடாது. ஒருவன் நித்திரையிலிருந்து விழித்த பின்னர்க் கொட்டாவி விட்டுக்கொண்டும் சரீரத்தை நெளித்துக்கொண்டும் படுக்கையில் கிடத்தல் மனத்தின் தூய்மையையும் ஒழுக்கத்தின் உறுதியையும் சுறுசுறுப்பையும் கெடுக்கக்கூடிய பழக்கம். ஆன்றோரும்

> "நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
> கெடுநீரார் காமக் கலன்"

என்று கூறியுள்ளார். ஒருவன் படுத்துக்கொண்டிருக்கும்போது சிந்தனைசெய்ய எத்தனிக்கக்கூடாது, அத்தகைய நிலைமைகளில் உறுதியும், தூய்மையும், உண்மையும் பொருந்திய நினைப்புக்களை நினைக்க முடியாது. ஒருவன் உறங்குவதற்காகப் படுக்கைக்குச் செல்லவேண்டுமே யன்றிச் சிந்திப்பதற்காகப் படுக்கைக்குச் செல்லுதல் கூடாது. அவன் சிந்திப்பதற்காகவும் வேலை செய்வதற்காகவும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவேண்டுமே யன்றி, உறங்குவதற்காகப் படுக்கையைவிட்டு எழுந்திருத்தல் கூடாது.

அடுத்த சாதனம் மீதூண் ஒழித்தல். மீதூண் கொள்பவன் யாவனெனின், உண்பதன் உண்மையான

பிரயோஜனத்தையும் நோக்கத்தையும் அறியாது மிருகம்போன்று உணவின் பொருட்டே உண்பவனும், தனது பசியைத் தணித்தற்கு வேண்டிய அளவுக்கு அதிகமாக உண்பவனும், தித்திப்பான பொருள்களிலும் கொழுத்த உணவுகளிலும் அவாவுடையவனுமே. உணவின் அளவைக் குறைத்தலாலும், உண்ணும் தடவைகளைக் குறைத்தலாலும், பலபொருட் சேர்க்கையில்லாத சாதாரண உணவைக் கொள்ளுதலாலும் அத்தகைய அவாவை ஒழித்தல் கூடும். இன்ன இன்ன மணி நேரங்களில் சாப்பிடுவது என்று குறித்துக் கொள்ளவேண்டும். மற்றை நேரங்களில் சாப்பிடுவதை அடியோடு நிறுத்திவிட வேண்டும். இராச்சாப்பாடு அநாவசியமானதாலும் அதிக உறக்கத்தையும் மயக்கத்தையும் உண்டுபண்ணுவதாலும் அதன் அளவைக் குறைக்க வேண்டும். இவ்வாறு ஒழுங்கு செய்து கொண்டுவருதலானது அடக்க முடியாததென்று தோற்றிய பசியை அடக்கக்கூடிய ஆற்றலை விரைவில் உண்டுபண்ணும்; மீதூண் விரும்பும் குற்றத்தை மனத்திலிருந்து நீக்கியவுடனே தூயதாக்கப்பட்ட மனோநிலைமைக்குத் தக்க உணவைத் தெரிந்து உட்கொள்ளக்கூடிய பழக்கமும் ஒழுங்கும் ஏற்படும்.

அகத்தின் வேறுபாடே அவசியமானதென்று நன்றாக மனத்தில் கொள்ளவேண்டும்; இப்பயனைத் தராத

எவ்வகை உணவின் வேறுபாடும் யாதொரு பிரயோஜனமும் உடையதன்று. உண்ணும் இன்பத்தின் பொருட்டே உண்பவன் மீதூண் உண்பவனாகிறான். மீதூண் விருப்பத்தையும் மற்றைய பொறிகளின் அவாக்களையும் அகத்தை விட்டு நீக்கிவிட வேண்டும். ஆன்றோரும் "அற்றால் அளவறிந்துண்க" எனவும் "அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை" எனவும் கூறியுள்ளார்.

ஒருவன் சரீரத்தை நன்றாக அடக்கிச் சரியாக நடத்திய பொழுது, செய்யவேண்டிய காரியத்தைச் சுறுசுறுப்பாகச் செய்து முடித்தபொழுது, கடமையையாவது வேலையையாவது தாழ்க்காத பொழுது, அதிகாலையில் எழுந்திருத்தலை இன்பமாகக் கண்ட பொழுது, மிதமான செலவையும் மதுவுண்ணாமையையும் போகவெறுப்பையும் ஸ்திரமாகக் கைக்கொண்ட பொழுது, தன்முன் இடப்பட்ட உணவு எவ்வளவு சாதாரணமாகவும் கொஞ்சமாகவும் இருந்தாலும் அதனோடு திருப்தி யடைந்தபொழுது, உண்ணும் இன்பத்தின் அவாவை வேரோடு நீக்கிய பொழுது, உயர்தரவாழ்விற்குரிய முதல் இரண்டு சாதனங்களையும் அடைந்துவிட்டான்; அப்பொழுது மெய்ப்பொருளின் முதற் பாடத்தைக் கற்றுவிட்டான். இதுவே அமைதியும் அடக்கமும் ஒழுக்கமும் அமைந்த ஒரு வாழ்க்கையின் அடிப்படையாகும்.

உயர்தர வாழ்வு

இரண்டாம் பாடம்.

அடுத்த பாடம் வாக்கின் ஒழுக்கத்தைப் பற்றிய பாடம்; இதில் வரிசையான ஐந்து சாதனங்கள் இருக்கின்றன. முதல் சாதனம் புறங்கூறலை ஒழித்தல். புறங்கூறலாவது பிறர்மீது குற்றம் காண்டலும், பிறரைப்பற்றிக் கெட்ட சமாசாரங்களைப் பிரஸ்தாபித்தலும், கண்முன் இல்லாத சிநேகிதர் முதலானவருடைய குற்றங்களை வெளிப்படுத்தலும் பெரிதாக்கலும், பிறர்மீது அநியாயமான குறைகளைக் கூறுதலுமாம். நினைப்பின்மை, குரூரம், வஞ்சகம், பொய்மை இவை நான்கும் புறங்கூறற் செய்கை ஒவ்வொன்றிலும் பிரவேசிக்கின்றன. எவன் சரியான வாழ்வை அடைதற்குக் கருதுகின்றானோ அவன் புறங்கூறலாகிய குரூர வார்த்தைகள் தனது உதடுகளைக் கடந்து செல்வதற்கு முன் அவற்றை அடக்கத் தொடங்கிப் பின்னர் அவற்றை உற்பத்தி செய்த வஞ்சக நினைப்பைத் தடுத்து நீக்கிவிடுவான். அவன் ஒருவரையும் குறை கூறாது தன்னைக் காத்துக்கொள்வான்; அவன்

நகையாடியும் முத்தமிட்டும் கூடிக்குலாவிய சிநேகிதனைப்பற்றி அவன் இல்லாத இடத்தில் குற்றம் கூறுதலையும் இழிவாகப் பேசுதலையும் நிறுத்திவிடுவான்; அவன் பிறன் முன்பு சொல்லத் துணியாத (அவனைப் பற்றிய) வார்த்தையை அவன் பின்பு சொல்லமாட்டான். இவ்விதமாகக் கடைசியில் அவன் பிறருடைய கௌரவத்தையும் ஒழுக்கத்தையும் பற்றி உயர்வாக நினைக்க ஆரம்பித்துப் புறங்கூறலுக்கு உற்பத்தி ஸ்தானங்களாக இருந்த தனது பிசகான மனோ நிலைமைகளை அழித்துவிடுவான்.

அடுத்த சாதனம் பயனற்ற பேச்சை ஒழித்தல். பிறருடைய அந்தரங்கமான காரியங்களைப் பேசுதலும், நேரத்தைப் போக்குதற்காக மட்டும் பேசுதலும், காரியமும் சம்பந்தமு மில்லாத சம்பாஷணையிற் பிரவேசித்தலும் பயனற்ற பேச்சாம். அத்தகைய அடக்கப்படாத பேச்சு ஓர் ஒழுங்கீன மனத்திலிருந்து வெளிப்படுகின்றது. ஒழுக்கமுள்ள மனிதன் தனது நாவை அடக்கி, அதனால் தனது மனத்தைச் சரியாக அடக்கும் வழியைக் கற்றுக்கொள்வான். அவன் தனது நாவைச் சோம்பலோடும் மடமையோடும் ஓடவிடமாட்டான். ஆனால், திருத்தமாகவும் தெளிவாகவும் பேசுவான்; ஒரு காரியத்தைக் கருதிப்

பேசுவான் அல்லது மௌனமாக இருப்பான். ஆன்றோரும்

"சொல்லுக சொல்லிற் பயனுடைய: சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்."

என்று கூறியுள்ளார்.

தள்ளவேண்டிய அடுத்த தீயொழுக்கம், நிந்தனையும் அன்பற்ற பேச்சுமாம். பிறரை நிந்திக்கிற அல்லது பிறர்மேல் குற்றம் சார்த்துகிற மனிதன் சரியான மார்க்கத்தை விட்டுத் தவறி வெகுதூரம் போய் விட்டவனாவான். பிறரிடத்துக் கடுமையான சொற்களைப்பேசுதலும், பிறரைக் கடுமையான பெயர்களால் அழைத்தலும், குற்றத்துள் ஆழ்ந்து அமிழ்ந்துபோதற்குக் காரணமாம். பிறரை நிந்திக்கவும் குற்றம் கூறவும் ஒருவனுக்கு மனம் எழும்பொழுது, அவன் தனது நாவை அடக்கித் தன்னிடத்துள்ள குற்றங்களைப் பார்க்கக் கடவன். ஆன்றோரும்

"ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு."

என்று கூறியுள்ளார். ஒழுக்கமுள்ள மனிதன் பிறரை நிந்தித்தலையும் பிறரோடு சச்சரவு செய்தலையும் நிறுத்திவிடுகிறான். பயனும், ஆவசியகமும், நன்மையும்,

உண்மையும் பொருந்திய வார்த்தைகளே மாத்திரமே அவன் பேசுகிறான்.

அடுத்த சாதனமாவது, இழிசொற்களையும் மரியாதையற்ற சொற்களையும் ஒழித்தல். அற்பமான வார்த்தைகளையும் பிறரை வருத்தக்கூடிய வார்த்தைகளையும் பேசுதல், தகுதியற்ற விகடங்களைப் பேசுதல், வெறும் சிரிப்பை உண்டுபண்ணும் நிமித்தம் தூஷணமான கதைகளைச் சொல்லுதல், கோபம் மூட்டக்கூடிய அளவில் நெருங்கிப் பழக்கம் பாராட்டுதல், பிறரிடத்தில் அல்லது பிறரைப்பற்றி—முக்கியமாக, மூத்தோர், உபாத்தியாயர், குடும்பத்தலைவர், மேல் உத்தியோகஸ்தர் முதலானவர்களிடத்தில் அல்லது அவர்களைப்பற்றிப் பேசும் பொழுது அலக்ஷியமாகவும் மரியாதைக் குறைவாகவும் பேசுதல், ஆகிய இவற்றையெல்லாம் ஒழுக்கத்தையும் மெய்ப்பொருளையும் நாடுகிற மனிதன் விட்டுவிட வேண்டும். ஒருநிமிஷத்தில் கழிந்துபோகக் கூடிய சிரிப்பின்நிமித்தம் கண்முன் இல்லாத நண்பரும் தோழரும் அகௌரவமாகிய கழுவில் இடப்படுகின்றனர்; வாழ்வின் பரிசுத்தங்களெல்லாம் பரிகாசமாகிய அக்கினிக்கு இரையாக்கப்படுகின்றன. யாவரிடத்திலும் மரியாதையையும், பணிவைக்காட்டவேண்டிய இடத்தில் பணிவையும் கைவிட்டபொழுது ஒழுக்கம்

கைவிடப்பட்டது; அடக்கம், பெருந்தன்மை, மதிப்பு இவற்றைப் பேச்சைவிட்டும் நடக்கையைவிட்டும் பிரித்தபொழுது மெய்ப்பொருள் இழக்கப்பட்டது; ஆம், அதன் வெளிவாயிலும் மறைக்கப்பட்டு மறக் கப்பட்டது. அடங்காமை சிறுவரிடத்தும் காணப் படின் அது தாழ்வை யுண்டுபண்ணுகிறது. அது நரைத்த மனிதரிடத்தும் பிரசங்கிகளிடத்தும் காணப் படும்பொழுது பரிதாபப்படத்தக்க ஒரு காட்சியா கிறது; இதனை அநுசரித்தலும் பின்பற்றலும் குருட ரைக் குருடர் பின்பற்றுவது போலாம். அப்பொழுது மூத்தோர்களும் பிரசங்கிகளும் ஜனங்களும் தமது வழியைவிட்டுத் தவறிவிட்டவராவர்.

ஒழுக்கமுள்ள மனிதன் பெருந்தன்மையும் மரியா தையுமுள்ள சொற்களைப் பேசுவான். அவன் இறந்து போனவர்களை எப்படி உயர்வாக மதித்து உருக்கமா கப் பேசுவானோ, அப்படியே தன் முன் இல்லாதவர் களையும் உயர்வாக மதித்து உருக்கமாகப் பேசுவான்; அவன் நினைப்பின்மையை ஒழித்து விடுவான்; மற்ற வரை அற்பமாகவும் வருத்தும்படிக்கும் பேசுதற்கு எழும் தனது மனவெழுச்சியை நிறைவேற்றுதற் காகத் தனது மதிப்பைக் கெடுக்காமல் தன்னைக் காத் துக்கொள்வான்; அவனுடைய சிரிப்பு நன்மையுள்ள

தாகவும் குற்றமற்றதாகவும் இருக்கும்; அவனுடைய வாக்கு இனிமையும் பணிவும் பொருந்தியிருக்கும். அவன் தன்னை மெய்ப்பொருளின் மனிதனுக்குரிய கௌரவத்தோடு நடத்திக்கொள்ளும் பொழுது அவனுடைய ஆன்மா இனிமையாலும் கருணையாலும் நிறைவுறும். ஆன்றோரும்

> "சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
> இம்மையும் இன்பந் தரும்."

என்று கூறியுள்ளார்,

இரண்டாம் பாடத்தின் கடைசி சாதனமாவது பிறரை மடக்கும், அல்லது பிறர் பேச்சிற் குற்றம் காணும், நோக்கமாகப் பேசுதலை ஒழித்தல். நாவின் இக் குற்றம், அற்பப்பிசகுகளையும் குற்றம்போலத் தோற்று பவைகளையும் பெரிதாக்குதலினும் விவகரித்தலினும், மடத்தனமாகச் சொற்களைப் புரட்டுதலினும், பிறர் பேச்சின் முடிந்த கருத்தைக் கொள்ளாது ஒவ்வொரு சொல்லையும் மயிரைப் பிளத்தல்போலப் பிரித்துப் பொருள்படுத்துதலினும், ஆதாரமற்ற நினைப்புக்களையும் நம்பிக்கைகளையும் அபிப்பிராயங்களையும் ஆதாரமாகக்கொண்டு வீண் தர்க்கம் செய்தலினும் அடங்கியிருக்கிறது. வாழ்நாள் சுருக்கமானது; உண்மையானது. பாவத்தையும், நோவையும், துன்பத்தையும் தர்க்கத்தினாலும் குதர்க்கத்தினாலும் நீக்க முடியாது.

உயர்தர வாழ்வு.

எவன் பிறரை மறுப்பதற்காகவும் எதிர்ப்பதற்காகவும் அவரது வார்த்தைகளில் நழுவுவனவற்றைக் கவனத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிறானோ, அவன் தூய்மையாகிய உயர்ந்த மார்க்கத்தையும் துற (அகத்துற) வாகிய மெய்வாழ்க்கையையும் காணமாட்டான்.)
எவன் தனது சொற்களை இனிமையாக்கவும் சுத்தமாக்கவும் கருதி அவற்றை அடக்குவதற்கு எப்பொழுதும் கவனமாயிருக்கிறானோ, அவன் உயர்ந்த மார்க்கத்தையும் மெய்வாழ்க்கையையும் காண்பான். அவன் தனது சக்திகளை ஒருமுகப்படுத்தி, மனத்தின் கட்டடத்தைப் பலப்படுத்தி மெய்ப்பொருளை அதனுள் வைத்துப் போற்றுவான்.

நாவை நன்றாக அடக்கிப் புத்திசாலித்தனமாகக் கீழ்ப்படுத்தியபொழுதும், சுயநயங்கருதிய மனவெழுச்சிகளையும் தகுதியற்ற நினைப்புக்களையும் நாவிற்கு ஓடவிடாமல் நிறுத்தியபொழுதும், வாக்கு தீங்கற்றதாகவும் தூய்மையுள்ளதாகவும் இனிமை வாய்ந்ததாகவும் அருளுடையதாகவும் காரியார்த்தமுள்ளதாகவும் அமைந்தபொழுதும், மனத்திலுள்ளதையும் உண்மையையுந் தவிர வேறு ஒரு வார்த்தையையும் பேசாதபொழுதும், ஒழுக்கவாக்கின் ஐந்து சாதனங்களும் செய்து முடிக்கப்பட்டனவாயின; மெய்ப்பொருளின்

இரண்டாவது பெரிய பாடம் கற்று முடிக்கப்பட்டதா யிற்று.

இப்பொழுது சிலர் சரீரத்தை ஒழுங்கு செய்வதும் நாவை அடக்குவதும் எதற்காக? இத்தகைய கடும்பிரயாசமும், விடாமுயற்சியும், எச்சரிக்கையும் இல்லாமல் உயர்தரவாழ்வை அடைந்து அறியலாகாதோ என்று வினவுவர். ஆகாது. ஜடவுலகத்திற்போல சித்துலகத்திலும் எதையும் பிரயாசமின்றிச் செய்ய முடியாது; கீழுள்ளதை நிறைவேற்றும்வரை மேலுள்ளதை அறிய முடியாது. ஒரு மனிதன் உளியை எப்படிப் பிடிக்கவேண்டும் என்பதையும் ஓர் ஆணியை எப்படிச் செலுத்தவேண்டும் என்பதையும் கற்றுக்கொள்ளும் முன்னர் ஒரு நாற்காலியைச் செய்ய முடியுமா? தனது சரீரத்துக்குத் தான் அடிமையாக இருப்பதை ஒழிக்கும் முன்னர் மெய்ப்பொருளை அடைதற்குத் தக்கவாறு தனது மனத்தைத் திருத்த முடியுமா? அக்ஷரங்களையும் சுலபமான சொற்களையும் கற்றுப் பிரயோகிப்பதற்கு முன்னர்ப் பாஷையின் அரிய நுட்பங்களை அறியவும் பிரயோகிக்கவும் முடியாதது போல, நல்ல நடக்கையின் அரிச்சுவடியைப் பூர்த்தியாக அறியும் முன்னர் மனத்தின் ஆழ்ந்த நுட்பங்களை அறியவும் மனத்தைச் சுத்தப்படுத்தவும் முடியாது. பிரயாசத்தைப்பற்றிக் கேட்பின், ஒரு வாலி

பன் ஒரு கைத்தொழிலைக் கற்றுக்கொள்வதற்காக உற்சாகத்தோடும் பொறுமையோடும் ஏழெட்டு வருஷங்கள் மாணாக்கனு யிருப்பதில்லையா? அவன் தனது ஆசிரியனுக்குக் கீழ்ப்படிந்து, தனது தொழிலில் இடைவிடாது பழகித் திறமை அடைந்து, தானே ஓர் ஆசிரியனாகக்கூடிய காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு தனது ஆசிரியன் கற்பித்தவற்றில் ஒவ்வொன்றையும் கவனத்தோடும் உண்மையோடும் நாள் தோறும் செய்துவரவில்லையா ? சங்கீதத்தில், சித்திர வேலையில், பாஷையில், ஒரு கைத்தொழிலில், ஒரு வியாபாரத்தில் அல்லது உத்தியோகத்தில் மேன்மையடையவேண்டுமென்று உண்மையாகக் கருதுகிற மனிதரில் எவன் தான் குறித்த தொழிலில் நிறைவை அடைவதற்குத் தனது வாழ்நாள் முழுமையும் செலவுசெய்ய விருப்பமில்லாதவன் ? அங்ஙனமிருக்க எல்லாவற்றிலும் உயர்ந்த மெய்ப்பொருளின் காரியத்தில் பிரயாசத்தைப் பெரிதாக நினைக்கலாமா ? எவன் 'நீ காட்டுகிற மார்க்கம் செல்லுதற்கு மிகக் கஷ்டமானது ; நான் மெய்ப்பொருளைப் பிரயாசமின்றியும், மோக்ஷத்தைத் முயற்சியின்றியும் அடையவேண்டும்' என்று சொல்லுகிறானோ, அவன் சுயநயத்தினால் வரும் கவலைகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் நீங்குதற்குரிய மார்க்கத்தைக் காணமாட்டான் ; அவன் அமை

தியும் உறுதியுமுள்ள மனத்தையும் விவேகத்தோடு அமைக்கப்பட்ட வாழ்க்கையையும் அடையமாட்டான். அவன் விருப்பம் சுகத்தை நாடியும் போகத்தை நாடியுமே செல்லுகிறது ; மெய்ப்பொருள்பாற் செல்வதேயில்லை. எவன் தனது அகத்தின் அடியில் மெய்ப்பொருளை வைத்துப் போற்றி அதனை அறிதற்குக் கோருகிறானோ, அவன் எந்த வேலையையும் மிகப் பெரிதென்று கருதமாட்டான்; ஆனால், அவன் அதனை உற்சாகத்தோடு செய்து பொறுமையோடு பின்பற்றுவான் ; அவன் இடைவிடாத அப்பியாசத்தினால் மெய்ப்பொருளின் ஞானத்தை அடைந்துவிடுவான்.

பிசகான புறநிலைமைகள் யாவும் அகத்தின் பிசகான நிலைமைகளின் தோற்றங்களேயென்று ஒருவன் அறிந்தபொழுது, சரீரத்தையும் நாவையும் பிரதமத்தில் ஒழுங்குசெய்வதான ஆவசியகத்தைத் தெளிவாகக் காண்பான். ஒரு சரீரம் சோம்பலுள்ளதென்றால் மனம் சோம்பலுள்ளதென்பது தானே விளங்கும். நா ஒழுங்கற்றதென்றால் மனம் ஒழுங்கற்றதென்பது தானே விளங்கும். புறநிலைமையை நிவிர்த்திப்பதற்காகச் செய்யும் சாதனம் உண்மையில் அகநிலைமையைச் சீர்ப்படுத்துவதற்காகச் செய்யப்படும் சாதனமே. அன்றியும், அப்புறநிலைமைகளை ஒழித்தலாவது மெய்ப்பொருளை அடைவதற்குரிய சாதனத்தின் ஒரு சிறிய

பாகமே. தீமையை விடுதல் நன்மையைப் புரியும்படி செய்யும். தீமையும் நன்மையும் பிரிக்க முடியாத சம்பந்தம் உடையவை. ஒரு மனிதன் சோம்பலையும் மீதூணையும் ஒழித்துக்கொண்டுவந்தால், அவனிடத்தில் போக விரக்தி, மதுவிலக்கு, காலந்தவறாமை, தன்மறுப்பு, ஆகிய ஒழுக்கங்கள் வளர்ந்துகொண்டுவரும்; உயர்ந்த வேலைகளைச்செய்து முடிப்பதற்கு இன்றியமையாத பலமும், ஊக்கமும், உறுதியும் உண்டாகிக்கொண்டிருக்கும். ஒருவன் வாக்கின் குற்றங்களை ஒழித்துவந்தால், அவனிடம் உண்மை, வஞ்சகமின்மை, பணிவு, அன்பு, தன்னடக்கம் என்னும் ஒழுக்கங்கள் வளர்ந்துவரும்; மனத்திட்பமும், வினைத்திட்பமும் உண்டாகும். அவற்றை அடையாமல் மனத்தின் அரிய நுட்பங்களை ஒழுங்குசெய்வது முடியாது; ஒழுக்கத்தின் உயர்ந்த நிலைகளையும் ஞானத்தின் உயர்ந்த நிலைகளையும் அடைவது முடியாது. அன்றியும், அவன் சரியாகச் செய்யக் கற்கும்போது அவனுடைய அறிவு விரிகின்றது, அவனுடைய அகப்பார்வை கூர்மையாகின்றது. தனது பாடத்தைச் சரியாகப் படித்துமுடித்தபொழுது குழந்தையின் அகம் சந்தோஷம் அடைவது போல, ஒழுக்க வழியிலே செல்பவன் ஒவ்வொரு ஒழுக்கத்தையும் கைக்கொண்டபொழுது—காமத்தையும் கோபத்தையும் பின்பற்றுகிறவன் ஒருபோதும் காணமுடியாத—பேரின்பத்தை அநுபவிக்கிறான்.

உயர்தர வாழ்வு:

மூன்றும் பாடம்.

இப்பொழுது நாம் உயர்தரவாழ்வின் மூன்றும்பாடத்திற்கு வருகிறோம். அஃதாவது, நிஷ்காமிய கருமம், அசையாத நடுவு நிலைமை, அளவற்ற பொறுமை, ஆகிய மூன்று பெரிய மூலாதார ஒழுக்கங்களையும் ஒருவன் தனது வாழ்க்கையில் நாள்தோறும் அப்பியசித்தலும் ஆளுதலுமாம். ஒழுக்கத்தையும் மெய்ப்பொருளையும் அடைவதற்கு முயல்பவன், முதல் இரண்டு பாடங்களால் மிகச் சுலபமாக நீக்கக் கூடிய ஒழுங்கீன நிலைமைகளை ஒழித்து மனத்தைப் பதப்படுத்தியிருப்பதால், இப்பொழுது அதிக கடினமான பெரிய வேலைகளில் பிரவேசிப்பதற்கும் அகத்தின் ஆழ்ந்த நினைப்புக்களை அடக்கிப் பரிசுத்தப் படுத்துவதற்கும் சித்தமாயிருக்கிறான். கடமையைச் சரியாகச் செய்யாமல் உயர்ந்த ஒழுக்கங்களை அறிவது முடியாது; மெய்ப்பொருளை உணர்வது முடியாது. மனிதரிற் பெரும்பாலார், கடமையைத் தொந்தரையுள்ள ஒருவேலையாகவும், கஷ்டப்பட்டுச் செய்யவோ

அல்லது செய்ததாகக் காட்டவோ வேண்டிய நிர்ப்பந்தமுள்ள ஒன்ருகவும் கருதுகின்றனர். கடமையை இவ்வாறு கருதுதலுக்குக் காரணம் மனத்தின் ஒரு சுயநய நிலைமையும் வாழ்க்கையைப்பற்றிய ஒரு பிசகான அபிப்பிராயமுமாம். சகல கடமைகளும் தெய்விகமென்றும் அவற்றை உண்மையாகவும் நிஷ்காமியமாகவும் செய்து முடித்தல் ஒழுக்கத்தின் முக்கிய விதிகளில் ஒன்றென்றும் கருதவேண்டும்; கடமையைச் செய்யப் புகுகையில் சகல சுயநய நினைப்புக்களையும் சரீர நினைப்புக்களையும் களைந்துவிடவேண்டும்; அவற்றைக் களைந்தபொழுது கடமை துன்பமாகத் தோற்றுவது ஒழிந்து இன்பமாகத் தோற்றும். எவன் சரீர சுகத்தை அல்லது சொந்த லாபத்தை அவாவுகிருனே, அவனுக்கு மாத்திரம் கடமை தொந்தரையாகத் தோற்றும். தனது கடமையின் தொந்தரையால் புழுங்குகிற மனிதன் தன் மனத்தை ஆராய்ந்து பார்க்கக்கடவன். பார்த்தால், அவன் தனது தொந்தரை தனது கடமையால் உண்டாவதில்லை என்பதையும், ஆனல் அக்கடமையைச் செய்யாது தப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற தனது சுயநயத்தினுல் உண்டாகிறது என்பதையும் காண்பான். பெரிதாக இருந்தாலும் சிறிதாக இருந்தாலும், பொதுநன்மைக் குரியதானாலும் சுயநன்மைக்குரியதானாலும்,

எவன் தனது கடமையை அசட்டை செய்கிறானோ, அவன் ஒழுக்கத்தை அசட்டை செய்கின்றவன்; எவன் தனது அகத்தில் கடமையோடு போராடுகிறானோ, அவன் ஒழுக்கத்தோடு போராடுகின்றவன். கடமை ஒரு பிரியப் பொருளானபொழுதும், ஒவ்வொரு கடமையையும் சரியாகவும், உண்மையாகவும், மனக் கலக்கமில்லாமலும் செய்தபொழுதும், சுய நயத்தின் ஆணிவேர் அகத்தினின்று பெரும்பாலும் களையப் பட்டதாகும்; மெய்ப்பொருளின் உயர்ந்த நிலைகளை நோக்கி ஏறும் சோபானத்தில் ஒரு பெரியபடி ஏறப் பட்டதாகும். ஒழுக்கவழியிலுள்ள மனிதன் தனது கடமையைப் பூர்த்தியாகச் செய்வதில் தனது மனத்தை ஒருமுகப்படுத்துகிறான்; அவன் மற்றொருவனுடைய கடமையில் பிரவேசிப்பதில்லை.

மூன்றும் பாடத்தின் இரண்டாம் சாதனமாவது அசையாத நடுவுநிலைமையை அப்பியசித்தல். இவ்வொழுக்கம் மனத்தில் உறுதியாக ஸ்தாபிதமாகவேண்டும்; அதனால் அது மனிதனது வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் பிரவேசிக்கவேண்டும். சகல அயோக்கியதையையும், வஞ்சகத்தையும், பொய்ம்மையையும், ஏமாற்றத்தையும் அடியோடு விட்டுவிடவேண்டும். வஞ்சகமும் கபடமும் அணுவளவும் இல்லாமல் அகத்

தைச் சுத்தப்படுத்தவேண்டும். நடுவுநிலைமையாகிய மார்க்கத்தைவிட்டு ஓர் அங்குலம் விலகுதல் ஒழுக்கத்தைவிட்டு ஒரு காதம் விலகுவதாம். எதனையும் கூட்டியாவது குறைத்தாவது பேசுதல் கூடாது; உள்ளதை உள்ளபடியே பேசுதல் வேண்டும். வீண்பெருமையைக் கருதியாவது சொந்த லாபத்தைக் கருதியாவது பிறரை எள்ளளவேனும் வஞ்சிக்க முயலுதல் வேரோடு நீக்கப்படவேண்டிய ஒரு மயக்க நிலைமை. ஒழுக்க மனிதன் மனம் வாக்கு காயங்களால் நடுவு நிலைமையைப் பூரணமாக அப்பியசிப்பதுடன் நிகழ்ந்த உண்மையில் எள்ளளவும் கூட்டாமலும் குறைக்காமலும் பேசுதலும்வேண்டும். அவன் இவ்வாறு தனது மனத்தை நடுவுநிலைமைக்குக் கொண்டுவரும் மார்க்கத்தில் அவன் தனக்கு முன்னர் நியாயத்தைக் கவனித்துக்கொண்டும், எல்லாவற்றையும் பட்சபாதமில்லாமலும் விருப்பு வெறுப்பில்லாமலும் பார்த்துக்கொண்டும், மற்றைய மனிதரோடும் பொருள்களோடும் நியாயமாகவும் பட்சபாதமில்லாமலும் நடந்துகொண்டும் வருவான். நடுவுநிலைமையாகிய ஒழுக்கத்தை அப்பியசித்துப் பூர்த்தியாகக்கொண்டபொழுது, பொய்யைச் சொல்லவும் வஞ்சகத்தைச் செய்யவும் எழுகிற அவா முழுதும் நீங்கிவிட்டது, ஒழுக்கம் உறுதிப்பட்டுவிட்டது, அறிவு விசாலம் அடைந்துவிட்டது, வாழ்க்

கை ஒரு புதிய நோக்கத்தோடும் ஒரு புதிய சக்தியோடும் நிகழ்கின்றது. இவ்வாறு இரண்டாம் சாதனம் செய்து முடிக்கப்பட்டது.

மூன்றும் சாதனம் அளவற்ற பொறுமையை அப்பியசித்தல். இது வீண் பெருமை, சுயநயம், அகங்காரம் முதலியவற்றிலிருந்து உற்பத்தியாகாநின்ற 'பிறர் தனக்குத் தீங்கு செய்தனர்' என்ற உணர்ச்சியை ஒழித்தலும், யாதொரு பயனையும் கருதாமல் எல்லாருக்கும் உதவிபுரிதலும், எல்லாரிடத்தும் அன்பு பாராட்டலுமாம். பகைமை பாராட்டலும், பிறர் செய்த தீங்கைத் திரும்பச்செய்தலும், பிறர்செய்த தீங்குக்கு எதிர் தீங்கு செய்தலும் மிக இழிந்த செயல்களாம். அவை கவனிக்கவாவது மனத்தில் வைக்கவாவது தகுதியில்லாத அவ்வளவு தாழ்ந்த தீயொழுக்கங்களாம். இத்தகைய நிலைமைகளை அகத்துள் வளர்க்கிற எவனும் குற்றத்தினின்றும் துன்பத்தினின்றும் நீங்கித் தனது வாழ்வைச் சரியாக நடத்த முடியாது. அவற்றைக் களைதலும் அவற்றால் கலங்கா திருத்தலுமே வாழ்க்கையின் மெய்ந்நெறியைக் காணச்செய்யும்; பொறுமையையும் கருணையையும் வளர்ப்பதால் மாத்திரம் ஒழுங்காக அமைக்கப்பட்ட ஒரு வாழ்க்கையின் அழகையும் வலிமையையும் தெ

ருங்கவும் காணவும் முடியும். உறுதியான ஒழுக்கத்தையுடைய மனிதனது அகத்தில் பிறர் தனக்குத் தீங்குசெய்தனர் என்ற உணர்ச்சி ஒருபோதும் உண்டாகாது; அவன் தனக்குப் பிறர்செய்த தீங்கைத் திரும்பச் செய்தலை ஒழித்துவிட்டான், அவனுக்குப் பகைவரே இல்லை; மனிதர் அவனுக்குப் பகைவராகச் சேர்வாராயின், அவன் அவரது மடமையை அறிந்து, அதனைப் பொருட்படுத்தாது அவரை அன்புடன் நடத்துவான். ஒருவன் இவ்வித அகநிலைமையை அடைந்தபொழுது தனது சுயநய நாட்டங்களை ஒழுங்குபடுத்துதலின் மூன்றும் சாதனத்தைச் செய்து முடித்துவிட்டான்; அப்பொழுது ஒழுக்கம், ஞானம் இவற்றின் மூன்றும் பாடத்தைக் கற்றுத் தேர்ச்சியடைந்து விட்டான்.

சரியாகச் செய்தல், சரியாக அறிதல், இவற்றின் மூன்று பாடங்களிலுமுள்ள பத்துப் பிரதம சாதனங்களையும் ஒருவாறு சொல்லி முடித்தேன். இந்நூலைப் படிப்போர் அவற்றைக் கற்றுத் தமது வாழ்க்கையில் நாள்தோறும் அப்பியசித்து வருவாராக. மிக மேலான இன்பத்தையும் ஞானத்தையும் அடையும் முன்னர் இப்பொழுது சொல்லியவற்றினும் மிக மேலான சரீர ஒழுக்கத்தையும், நா ஒழுக்கத்தையும், மன

ஒழுக்கத்தையும் அநுஷ்டித்துக் கைக்கொள்ளவேண் டும். ஆனால், அவற்றை யெல்லாம் இச்சிறு நூலில் சொல்வதாக யான் நினைக்கவில்லை. உயர்தரவாழ்வின் மார்க்கத்திலுள்ள மிக சுலபமான பிரதம சாதனங்களை மாத்திரம் சொல்லியிருக்கிறேன்; இந்நூலைப் படிப் போர் இவற்றைப் பூர்த்தியாகக் கைக்கொள்வதற்கு முன்னர் தமது எதிர்கால அபிவிர்த்திக்குரிய வழிக ளைத் தெரிந்துகொள்ளத் தக்க விதத்தில் பரிசுத்த மடைந்தும், பல மடைந்தும் அறிவடைந்தும் இருப் பர். இந்நூலை வாசிக்கிறவர்களில் இம்மூன்று பாடங் களையும் கற்றுமுடித்தோர் தமக்கு மிகத்தூரத்திலும் உயரத்திலுமுள்ள மெய்ப்பொருளின் உயர்ந்த நிலைகளை யும் அவற்றிற் கொண்டுபோய்ச் சேர்க்கும் ஒடுங்கிய செங்குத்தான வழியையும் கண்டு, மேற்செல்லுவதா அல்லது செல்லாது நின்றுவிடுவதா என்று தீர்மானித் திருப்பர்.

யான் சொல்லியிருக்கிற நேரான மார்க்கம் எல்லா ராலும், தமக்கும் உலகத்துக்கும், அதிக லாபத்துடன் தொடரத்தக்கது; மெய்ப்பொருளை அடைவதற்குக் கோராதவரும் தம்மை இம்மார்க்கத்தில் சான்றோராக் கிக் கொள்வதால் அதிக விவேக பலத்தையும், ஒழுக்க பலத்தையும், நுண்ணிய யுக்தியையும், ஆழ்ந்த மனோ

சாந்தியையும் அடையக்கூடும், இவ் வகத்தின் மாறுபாடு அவாது லௌகிக அபிவிர்த்தியை ஒருபோதும் பாதியாது. அது அதிக உண்மையானதாகவும், பரிசுத்தமானதாகவும, நிலைநிற்கத் தக்கதாகவும் அமையும்; ஏனெனில், எவர் அற்பத்தன்மையையும் நாள்தோறும் செய்யக்கூடிய குற்றங்களையும் களைந்துவிட்டனரோ, எவர் தமது சரீரத்தையும் மனத்தையும் ஆள்வதற்கு பலத்தையுடையவரா யிருக்கின்றனரோ, எவர் அசையாத நடுவுநிலைமையும் அருமையான ஒழுக்கமுமாகிய மார்க்கத்தில் மனவுறுதியோடு செல்கின்றனரோ, அவரே வெற்றிபெறுவதற்கும் காரிய சித்தி அடைவதற்கும் தகுதியுள்ளவர்.

மனோ நிலைமைகளும் அவற்றின் காரியங்களும்.

சரியான வாழ்க்கையின் பெரிய சாதனங்களின் விவரங்களிலும் பெரிய பாடங்களின் விவரங்களிலும் பிரவேசியாது வாழ்க்கை முழுவதற்கும் மூலமாயிருக்கிற மனோநிலைமைகளைப்பற்றிச் சில குறிப்புக்களும் வார்த்தைகளும் இங்குக்கூறுகிறேன். அவை பிரயாசையெடுத்து வருகின்றோரை ஏற்பதற்காக அன்பும், அறிவும், சாந்தியும் தங்கியிருக்கிற நிலைகளாகிய அகத்தினுடைய ஆழ்ந்த அரங்குகளுக்குள் பிரவேசிப்பதற்குச் சித்தமாகவும் பிரியமாகவும் இருக்கிற மனிதருக்கு உதவியாகும்.

ஒவ்வொரு பாவமும் மடமையே. அது இருண்டதும் முதிர்ச்சி யடையாததுமான ஒரு நிலைமை. அறிவில்லாத மாணவன் கலாசாலையில் எந்த நிலையில் இருக்கின்றானோ, அந்த நிலையில் இருக்கின்றனர் குற்றத்தை நினைக்கின்றவரும் குற்றத்தைச் செய்கின்றவரும் வாழ்க்கையாகிய கலாசாலையில். அவர் சரி

யாக நினைக்கவும் செய்யவும், அஃதாவது மெய்ச்சட்டப் படி நினைக்கவும் செய்யவும், இனிமேல் தான் கற்றுக் கொள்ளவேண்டும். கல்வி கற்கும் மாணவன் தனது பாடங்களைச் சரியாகப் படியாத காலமெல்லாம் துக்கத்தில் அமிழ்ந்திருப்பதுபோல,வாழ்க்கை பயிலும் மாண வன் பாவங்களை வெல்லாத காலமெல்லாம் துக்கத்தி லிருந்து தப்பமுடியாது.

வாழ்க்கையானது தொடர்ச்சியான பல பாடங்க ளைக் கொண்டிருக்கின்றது. அவற்றைக் கற்பதில் சிலர் ஊக்கமுடையவரா யிருக்கின்றனர்; அதனால், அவர் விரைவில் தூயராகவும், அறிஞராகவும், சுகிகளாகவும் வளர்கின்றனர். மற்றையோர் அவற்றைக் கற்பதில் மந்த முடையவராயிருப்பதோடு அவற்றைக் கற்க முயலாம லும் இருக்கின்றனர்; அதனால், அவர் தீயராகவும், மடையராகவும், துக்கிகளாகவும் முதிர்கின்றனர்.

ஒவ்வொரு வகை துக்கமும் பிசகான ஒரு மனோ நிலைமையிலிருந்து உண்டாகின்றது. ஒவ்வொரு வகை சுகமும் சரியான ஒரு மனோ நிலைமையில் ஒட்டிக் கொண்டிருக்கின்றது. மனநேர்மையே சுகம்; மனக் கோணலே துக்கம். ஒரு மனிதன் பிசகான மனோ நிலைமைகளில் வசிக்கிற பொழுது பிசகாக வாழ்ந்து

கொண்டும், துன்பத்தை எப்பொழுதும் அநுபவித்துக்கொண்டும் இருப்பான். துன்பம் மடமையில் வேரூன்றியிருக்கின்றது; இன்பம் அறிவில் ஒட்டிக்கொண்டிருக்கின்றது. தனது மடமையையும் குற்றத்தையும் மயக்கத்தையும் ஒழிப்பதினாலேயே மனிதன் வீட்டை அடைவான். எவ்விடத்தில் பிசகான மனோநிலைமைகள் இருக்கின்றனவோ, அவ்விடத்தில் பந்தமும் அமைதியின்மையும் இருக்கின்றன. எவ்விடத்தில் சரியான மனோநிலைமைகள் இருக்கின்றனவோ, அவ்விடத்தில் மோக்ஷமும் அமைதியும் இருக்கின்றன.

சில பிசகான மனோ நிலைமைகளையும் அவை வாழ்க்கையில் உண்டுபண்ணும் தீயகாரியங்களையும் இங்குச் சொல்லுகிறேன்:—

பிசகான மனோநிலைமைகள்.	அவற்றின் காரியங்கள்.
வெறுப்பு.	... நோய், இம்சை, கேடு, துன்பம்.
காமம்.	... புத்திமயக்கம், கயமை, பழி, வறுமை.
வெங்கல்.	... அச்சம், அமைதியின்மை, துக்கம், நஷ்டம்.
அகங்காரம்.	... ஆசாபங்கம், மனவருத்தம், சுயபுத்தியின்மை.

மனோநிலைமைகள்.

வீண் பெருமை. ...	வியசனம், ஆன்ம அழிவு.
குற்றஞ்சார்த்தல். ...	குற்றஞ்சார்த்தப்படுதல், வெறுக்கப் படுதல்,
கெட்ட எண்ணம். ...	தோல்விகள், தொந்தரைகள்.
மீதூண். ...	சங்கடம், புத்தியின்மை, முரட்டுத் தனம், வியாதி, அசட்டை.
கோபம். ...	வலிமையையும் செல்வாக்கையும் இழத்தல்.
அவா அல்லது தனக் கடிமை. ...	வியசனம், மடமை, துக்கம், உறுதி யின்மை, தனிமை.

மேற்சொல்லிய மனோநிலைமைகள் இன்மைப் பொருள்கள்; அவை இருளும் இழவுமான நிலை மைகள் : மெய்யான சக்தியின் நிலைமைகளல்ல. தீமை ஒரு சக்தியன்று ; அது நன்மையை அறியா திருத்தலும் பிசகாக உபயோகித்தலுமே. அன்பின் பாடத்தைச் சரியாகக் கல்லாதவனே வெறுப்பவன் ; அதனால் அவன் துன்பத்தை அநுபவிக்கிறான். அவன் அதனைச் சரியாகக் கற்றுக்கொண்டபொழுது வெறுப்பு ஒழிந்துவிடும்; அவன் வெறுப்பின் இருண்ட தன்மையையும் வலியின்மையையும் காண்பான். ஒவ் வொரு பிசகான நிலைமையும் இத்தன்மையதே.

அகமே புறம்.

சில சரியான மனோநிலைமைகளையும் அவை வாழ்க்கையில் உண்டுபண்ணும் நல்ல காரியங்களையும் இங்குச் சொல்லுகிறேன் :—

சரியான மனோநிலைமைகள்.		அவற்றின் காரியங்கள்.
அன்பு.	...	இனிமையான நிலைமைகள், இன்பம், பேரின்பம்.
தூய்மை.	...	புத்தித்தெளிவு, ஆனந்தம், அசையாத நம்பிக்கை.
சுயநயமின்மை.	...	தைரியம், திருப்தி, சந்தோஷம், ஆக்கம்.
அடக்கம்.	...	அமைதி, மௌனம், மெய்ஞ்ஞானம்.
சாந்தம்.	...	சமாதானம், சகல சந்தர்ப்பங்களிலும் திருப்தி யுடைமை.
இரக்கம்.	...	காக்கப்படுதல், நேசிக்கப்படுதல், மதிக்கப்படுதல்.
நல்லெண்ணம்.	...	சந்தோஷம், வெற்றி.
தன்னை யடக்கல்.	...	மனோசாந்தி, சரியான யுக்தி, நாகரிகம், ஆரோக்கியம், கவுரவம்.
பொறுமை.	...	மனோவலிமை, அதிகச் செல்வாக்கு.
தன்னை வெல்லல்.	...	அறிவு, ஞானம், அகப்பார்வை, நிலையான சமாதானம்.

மனோ நிலைமைகள்.

மேற்சொல்லிய சரியான மனோநிலைமைகள், மெய்யான சக்தி, ஒளி, இன்பம், அறிவு என்பவற்றின் நிலைமைகள். நல்ல மனிதன் அறிகிறான். அவன் தனது பாடங்களைச் சரியாகக் கற்றுக்கொண்டான்; அதனால் அவன் தனது வாழ்க்கையை உண்டுபண்ணும் பல ஒழுக்கங்களையும் காண்கிறான். அவன் அறிவை யடைந்திருக்கிறான்; அதனால் அவன் நன்மையையும் தீமையையும் அறிகிறான். அவன் தெய்வத்திற்கு ஒத்த காரியங்களை மாத்திரம் செய்துகொண்டு மேலான ஆநந்தத்தை அநுபவிக்கிறான்.

பிசகான மனோ நிலைமைகளைக் கொண்டிருக்கிற மனிதன் சரியாக அறியமாட்டான். அவன் நன்மை தீமைகளையும், தன்னையும் தனது வாழ்வையும் உண்டு பண்ணும் அகமூலங்களையும் அறியவில்லை. அவன் துக்கத்தை அநுபவிக்கிறான்; தனது துக்கத்திற்கு மற்றவர்களே முற்றிலும் காரணம் என்று நம்புகிறான். அவன் வாழ்க்கையின் இலக்ஷியத்தைக் காணாமலும், காரியங்களின் நிகழ்ச்சியில் நியாயத்தையும் ஒழுங்கையும் காணாமலும், குருட்டுத்தனமாக வேலை செய்துகொண்டும் இருளில் வாழ்ந்துகொண்டும் இருக்கிறான்.

எவன் உயர்தரவாழ்வைப் பூரணமாக அடையக் கோருகிறானோ, எவன் காரியங்களின் உண்மையான

அகமே புறம்.

ஒழுங்கையும் வாழ்க்கையின் நோக்கத்தையும் தெளிவாகக் காண்பதற்கு விரும்புகிறானோ, அவன் சகல பிசகான அகநிலைமைகளையும் விட்டு, நன்மையைச் செய்வதில் இடைவிடாது முயல்க. அவனுக்குத் துன்பமாவது, சந்தேகமாவது, துக்கமாவது நேர்ந்தால், அவன் அதன் காரணத்தைக் காணும் வரையில் தனது அகத்துள் தேடுக ; அவன் அதனைக் கண்ட மாத்திரையில் வேரோடு நீக்கிவிடுக. அவன் தனது அகத்திலிருந்து ஒவ்வொரு நாளும் நன்மை அதிகமாகவும் தீமை கொஞ்சமாகவும் புறப்படும்படி தனது அகத்தைக் காத்துச் சுத்தப்படுத்துக; அவ்வாறு செய்வதால அவன் நாளுக்கு நாள் அதிக பலத்தையும் மேன்மையையும் ஞானத்தையும் அடைவான்; அதனால்,அவனது இன்பம் அதிகரிக்கும்; மெய்யோளி அவன் அகத்துள் மேன்மேலும் அதிகப் பிரகாசமாக வளர்ந்து, சகல இருளையும் நீக்கி, அவனது மார்க்கத்தை விளக்கிக் காட்டும்.

வேண்டுகோள்.

மெய்ப்பொருளின் மாணவர்களே, ஒழுக்கத்தை நேசிக்கிறவர்களே, ஞானத்தை நாடுகிறவர்களே, சுயநய வாழ்வின் வெறுமையை அறிந்து துக்க முறுகின்றவர்களே, பேரழகும் பேரின்பமும் பொருந்திய வாழ்வைக் கோருகின்றவர்களே, நீங்கள் இப்பொழுதே ஆயத்தமாகி ஒழுக்கவழியில் நடந்து நல்ல வாழ்வை அடையுங்கள்.

உங்களைப்பற்றி நீங்கள் கொண்டிராநின்ற தப்பு நம்பிக்கையைத் தூர விட்டுவிடுங்கள்; நீங்கள் எப்படியிருக்கிறீர்களோ, அப்படியே உங்களை நோக்குங்கள். ஒழுக்கநெறி எப்படி யிருக்கிறதோ அப்படியே அதனைப் பாருங்கள். மெய்ப்பொருளை அடைவதற்குச் சோம்பலான வழி ஒன்றும் இல்லை. மலையின் உச்சியின்மேல் ஏறி நிற்க விரும்புகிறவன் பிரயாசப்பட்டு ஏறவேண்டும்; பலத்தைச் சேகரிப்பதற்கு மட்டும் இடையில் தங்கவேண்டும். மலையுச்சியினும் மலைமேல் ஏறுதல் குறைந்த பெருமையுள்ளதாகத் தோன்றினும், மலைமேலேறுதல் உண்மையில் பெருமை

வாய்ந்ததே. ஒழுக்கம் தன் மாத்திரையிலே அழகு வாய்ந்தது; ஒழுக்கத்தின் அந்தம் இனிமை நிறைந்தது. ஆன்றோரும்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

என்று கூறியுள்ளார்.

அதிகாலையில் எழுந்து தியானம் செய்யுங்கள். ஜயிக்கப்பட்ட உடம்போடும், பலவீனத்தையும் பாவத்தையும் ஒழிக்கத்தக்க உறுதியான மனத்தோடும் ஒவ்வொரு நாளையும் தொடங்குங்கள். தீய கவர்ச்சியை, முன்னதாகவே சன்னத்தமாகாத மனத்தால் வெல்ல முடியாது. அமைதியான நேரத்தில் மனத்திற்கு ஆயுதம் தரித்து அதனை யுத்தத்திற்குச் சன்னத்தமாக்க வேண்டும். காண்பதற்கும், அறிவதற்கும், தெளிவதற்கும் அதனைப் பழக்கவேண்டும். சரியான அறிவு முதிர்ந்தபொழுது பாவமும் தீயகவர்ச்சியும் மறைந்து போகின்றன. ஆன்றோரும் "அறிவற்றங் காக்குங் கருவி" என்று கூறியுள்ளார்.

சரியான அறிவு தளராத நன்னடக்கையால் உண்டாகிறது. மெய்ப்பொருளை ஒழுக்கத்தாலன்றி வேறொன்றால் அடையமுடியாது. முயற்சியும் அப்பியாசமும்

வேண்டுகோள்.

பொறுமையை வளர்க்கும்; பொறுமை நன்னடையை நிலைநிறுத்தும்.

ஒழுக்கத்தைக் கொள்ளுதல் பொறுமையற்ற மனிதனுக்கும் சுயநய மனிதனுக்கும் கஷ்டம்; அதனால், அவன் அதனைக் கைவிட்டு ஒழுங்கீனமாகவும் குழப்பமாகவும் வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

ஒழுக்கம் மெய்ப்பொருளை நேசிக்கிறவனுக்குக் கஷ்டமாயிருப்பதில்லை; அவன் காத்திருந்து, வேலை செய்து, வெற்றிக்குரிய அளவற்ற பொறுமையைக் காண்பான். தனது மலர்கள் நாளுக்கு நாள் திரட்சியடைந்து வருவதைக்காணும் தோட்டக்காரனது உவகையைப்போலத் தூய்மை, ஞானம், இரக்கம், அன்பு என்னும் தெய்விக மலர்கள் தனது அகத்தோட்டத்தில் நாளுக்கு நாள் வளர்ந்துவருவதைக் காணும் ஒழுக்க மனிதனது உவகையும் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டிருக்கும்.

ஒழுங்கீனமாக வாழ்கின்றவன் துன்பத்திலிருந்தும் துக்கத்திலிருந்தும் தப்பமுடியாது. ஒழுங்கு செய்யப்படாத மனம் காமக்குரோதத்தின் பயங்கரமான யுத்தத்தில் பலமிழந்து துணையற்று வீழ்கின்றது. ஆன்றோரும் "இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி" என்று கூறியுள்ளார்.

அகமே புறம்.

மெய்ப்பொருளை நேசிக்கிறவர்களே, உங்கள் மனத்தை ஒழுங்கு செய்யுங்கள். எச்சரிக்கையோடும், ஆலோசனையோடும், உறுதியோடும் இருங்கள். உங்கள் முத்தி உங்கள் அருகில் இருக்கிறது; உங்கள் ஆயத்தமும் முயற்சியும் வேண்டுவன. நீங்கள் பத்துத் தடவை தவறினும் அதைரியப்படாதீர்கள்; நீங்கள் நூறு தடவை தவறினும் ஊக்கத்துடன் எழுந்து உங்கள் வழியைத் தொடருங்கள்; நீங்கள் ஆயிரம் தடவை தவறினும் தளர்ச்சி அடையாதீர்கள். சரியான மார்க்கத்தில் பிரவேசித்த பின்னர், அந்த மார்க்கத்தில் நின்று சிறிது தவறினும், வெற்றியடைதல் நிச்சயம்.

முதலில் யுத்தம்; முடிவில் வெற்றி. முதலில் வேலை; முடிவில் ஓய்வு. முதலில் எளிமை; முடிவில் வலிமை. தொடக்கத்தில் தாழ்ந்த வாழ்வு, யுத்தத்தின் சந்தடி, யுத்தத்தின் குழப்பம்; இறுதியில் உயர்தர வாழ்வு, மௌனம், சாந்தி.

முற்று.

மனம்போலவாழ்வு.

"இந்நூல் மிகப் பிரசித்திபெற்ற ஜேம்ஸ் ஆலன் என்னும் ஆங்கிலப் பண்டிதர் இயற்றியுள்ள மிக அழகிய நூல்களில் ஒன்றன் மொழிபெயர்ப்பு. இதன் தமிழ் நடையும் சொற்களும் மிக இனிமையாகவும், தெளிவாகவும், மனத்தைக் கவரத்தக்கனவாகவும் இருக்கின்றன. இந்நூலை இற்றியதற்காக ஸ்ரீமாந் வ. உ. சிதம்பரம் பிள்ளை யவர்களுக்குத் தமிழுலகம் மிகவும் கடன்பட்டுள்ளது. தமிழ் ஞானிகளும் யோகிகளும் சொல்லியுள்ள விஷயங்களே இந்நூலிற் சொல்லப்பட்டுள்ளன. இதனைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் கற்றுணரவேண்டுவது ஆவசியகம்.!'—

தேன்இந்தியா மேயில், மதுரை.

அகமேபுறம்.

"இந்நூலை யான் வாசித்தேன். படித்த இந்தியர்கள் பொது ஜனங்களுக்குச் செய்யவேண்டிய மிகமிக முக்கிய கடமைகளுள் ஒன்று மேல்நாட்டு நூல்களிற் சிறந்தவற்றையெல்லாம் சுதேசபாஷைகளில் மொழிபெயர்த்துக் கொடுப்பதே. ஸ்ரீமாந். சிதம்பரம்பிள்ளை யவர்கள் தமது இக்கடமையை ஜேம்ஸ்ஆலனது நூல்களை மொழிபெயர்த்தலாற் செய்து கொண்டிருக்கின்றார்கள். பிள்ளையவர்களது முயற்சி நன்றாகவே முடிந்திருக்கிறதென்று யான் நினைக்கிறேன். இந்நூல் சாதாரணக் கல்வியுள்ள தமிழர்களும் உணரத்தக்கவாறு இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. இது பலராலும் வாசிக்கப்பட்டு மதிப்புப் பெறுமென்று யான் நம்புகிறேன். கலாசாலைகளில் இந்நூலை ஒழுக்கப் பாடப் புத்தகமாக ஏற்படுத்தலாம் அல்லது உபயோகிக்கலாம் என்று யான் நினைக்கிறேன்.'' **பிரஹ்மஸ்ரீ. ப. வே,**

நாசிம்ஹ அய்யாவர்கள், சென்னை சட்டசபை அங்கத்தினர், சேலம்.

மெய்யறம்.

"ஸ்ரீமாந். வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்கள் இயற்றிய மெய்யறம் ஐந்தியலும் நூற்றிருபத்தைந் ததிகாரமு மாக முடிந்த நூல். ஐந்தியல்களாவன--முப்ப ததிகாரங்கொண்ட மாணவவியல், முப்ப ததிகாரங்கொண்ட இல்வாழ்வியல், ஐம்ப ததிகாரங் கொண்ட அரசியல், பத் ததிகாரங்கொண்ட அந்தணவியல், ஐந் ததிகாரங் கொண்ட மெய்யியல் என்பவை. ஒவ்வோ ரதிகாரமும் பப்பத்து வெண்செந்துறை கொண்டுள்ளது. முப்பாலில் அறமும் பொருளுந் தழுவி கால வேறுபாட்டிற்கு வேண்டும் விகற்பங் கூறலால் இந்நூல் திருவள்ளுவப் பயனுக்கு வழிநூலாக விளங்குகின்றது. முதுமொழிக் காஞ்சி போன்று திட்பமும் நுட்பமுஞ் சிறந்து இழுமென் மொழியால் விழுமிய பொருள் உரைத்தலால் இந்நூல் தோல் என்னும் வனப்புவாய்ந்தது. தமிழ்ப்புலவரே யன்றி இங்கிலீஷ்படித்த புலவரிற் பலரும் இந்நூலின் திறத்தை மெச்சுவர் என்பது துணிபு. ஒருமுறை கண்ணுறுவோர்க்கு இந்நூலின் அருமை தானே புலப்படு மாதலால், அதனை இங்கு விரிப்பது மிகையாம். இந்நூல் நின்று நிலவுக என்பது என் வேண்டுகோள்."—ஸ்ரீமாந். தி. செல்வகேசவராய முதலியா ரவர்கள், சுதேச பாஷைகளின் அத்தியக்ஷகர், பச்சையப்பன் உயர்தரக் கல்லூரி, சென்னை.

பாடற்றிரட்டு.

" இப்புத்தகத்திலுள்ள பாக்களை இயற்றிய ஸ்ரீமாந். வ. உ. சிதம்பரம் பிள்ளை யவர்களைப் பற்றி நாம் விசேடித்தெழுதவேண்டிய தொன்றுமில்லை. உலகமறிந்த தேசாபி

மானியாகிய இவர்களைப்பற்றி எழுதுவது மிகையேயாகும். இப்புத்தகத்தில் இவர்கள் சிறைவாசத்திற்குமுன் பாடிய பல செய்யுள்கள் முதற்பாகமாகவும், கோயமுத்தூர் கண்ணனூர்ச் சிறை வாசகாலத்தில் பாடிய பல தனிப்பாக்கள் இரண்டாம் பாகமாகவும் சேர்க்கப்பட்டுள்ளன. பாடல்களெல்லாம் நவின்றோர்க் கினிய நன்மொழிகளால் விழுமிய பொருள் பயக்குமாறு இனிய ஓசைகொள்ள யாக்கப்பட்டுள்ளன. தம் பிதா, மனைவி முதலிய பலர்க்குக் கடித முகமாக எழுதிய கவிகள் மிகவும் உருக்கந் தந்து விளங்குவன. நீதி போதனைச் செய்யுள்களோ பண்டைக்கால நீதிநூல்களோடொப்பத் திட்ப நுட்பம் கொண்டுள்ளன. ஈகை, அன்பு, உண்மை, ஊழ்வலி, முயற்சித்திறம் முதலிய பல விஷயங்களைப் பற்றிய அருமையான செய்யுள்கள் பல இதனுட் காணப்படுகின்றன. ஒருவன் துன்பம் வந்த காலத்துக் கலங்காது அதனையே இன்பமாக நினைத்தல் அத்துன்பத்தை வெல்லத்தக்க கருவியாம் என்பதை இப்புத்தகத்துள் நன்கு காணலாம். இஃது அகச்சிறப்புக்களுடன் நல்ல காகிதம், நல்ல அச்சு, நல்ல பயிண்டு ஆகிய புறச்சிறப்புக்களும் பெற்றுளது."—வித்தியாபாநு, மதுரை.

மெய்யறிவு.

"இந்நூல் தேச பக்த சிரோரத்தினமாகிய நம் சகோதரர் ஸ்ரீமாந். வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது. இந்நூல் போன்ற தெளிவான நூல்களே இக்காலத்துக்கு அவசியம் வேண்டப்படுவனவாம். இந்நூலை ஓதி, உணர்ந்து, அவ்வாறே நடக்கப் பயிலுதல் தமிழ்மக்கள் கடனாம். ஏனெனில், பல நாளும் பல நூல்களையும் பயின்றோர் தெளிந்து உணர்ந்த உண்மைகளே இந்நூலில் பொதிந்

துள்ளன. இந்நூல் பயிலப்பெற்ற தமிழ்மக்களே தமிழ் மக்கள். அவர்கள் அநுபவிக்கும் இன்பமே இன்பம்."—விவேகபாநு, டர்பன், தேன் ஆபிரிக்கா.

"இந்நூல் 100 நேரிசை வெண்பாக்களையுடையது. இது தன்னையறிதல், மனத்தையாள்தல், அறம்புரிதல், மெய்யுணர்தல் முதலிய 10 அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாட்டும் அநுவயம், பதவுரை, கருத்து முதலியவற்றால் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. செய்யுள் நடை ஆற்றொழுக்காயிருப்பது மன்றி சொற்செறிவு பொருட்செறிவு வாய்ந்ததாகவு மிருக்கிறது. பழையநூல்களின் கருத்துக் கிசைந்து பாக்கள் நன் கமைந்திருக்கின்றன."—வித்தியாபாநு, கோநகர்.

வள்ளியம்மை சரித்திரம்.

"இந்நூல் நம் தேச பக்த சிரோமணியாகும் ஸ்ரீமாந். வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களின் முதல் மனைவியாரான உத்தம பத்தினியின் உண்மைச் சரித்திரமாம். இதனை இயற்றியவர் நமது பிள்ளையவர்களின் சமீப பந்து. ஆதலின் அவ்வம்மையாரின் செயல்களைக் கண்ணாரக் காணும் பாக்கியம் பெற்றவர். இக்காலத்தும் இத்தகைய பெண் மணிகள் நம் பாரத நாட்டில் உதித்து வருகின்றனர் என்பதை நம்மனோர் அறிந்து கொள்ளவும், இவ்வுலகிலுள்ள மாதரெல்லாம் கற்றுத் திருந்தவும் ஏதுவாயிருத்தலால், இந்நூல் நம் சகோதரினும் சகோதரிகட்கு மிக்க பயன் விளைக்கத்தக்க தொன்றும் என்போம்."—விவேக பாநு, டர்பன், தேன் ஆபிரிக்கா.